பக்கங்கள்:12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 11 ஞாயிற்றுக்கிழமை 25.06.2023 கதிர்226

### எக்ஸ்பிரஸ் பேர்ள், நியூ டயமன்

## கப்பல்களின் விபத்துகள் தொடர்பில் மக்களின் கருத்துக்களை ஏற்க முடிவு

நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான கப்பல்கள் தொடர்பில் நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவில் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களை பெறுவதற்கும், அது தொடர்பானபத்திரிகைவிளம்பரங்களை வெளியிடுவதற்கும் இரண்டு வார கால அவகாசம் வழங்கத்தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான கப்பல்கள் ஆராய்வதற்கான விசேட தெரிவுக்குழு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை2மணிக்கு கூடவுள்ளது.

எம்.வி.எக்ஸ்பிரஸ்பேர்ள் கப்பல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு கடந்த வாரம் அதன் தலைவர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் முதல் தடவையாகக் கூடியது. குழுவின் எதிர்கால செயற்பாடுகள் குறித்த அடிப்படை விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

எம்.வி.எக்ஸ்பிரஸ்பேர்ள் கப்பல் விபத்து மற்றும் அது தொடர்பில் வழக்குத் தாக்கல்செய்தல், சுற்றுச்சூழல் பாதிப்புகள், ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதா, அது தொடர்பில் அரச பொறிமுறையில்முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக குழுவின் தலைவர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இதன்போது தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கும் அவ்வாறான அவசர நிலையை எதிர்கொள்வதற்கும்மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை கள் தொடர்பிலும் இந்தக் குழு பரிந்துரைகளை வழங்கும் என அவர் தெரிவித்தார்.

கொழும்புதுறை ☞ 2

## பொருளாதார மீட்சிக்கு ஐ.நா. முழு ஒத்துழைப்பு

### அதன் பொதுச் செயலர் ஜனாதிபதியிடம் உறுதியளிப்பு

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் கடன் முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை முழு ஒத்துழைப்பு வழங்கும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர்நாயகம்அண்டோனியா குட்டரெஸ்ஜனாதிபதிரணில்விக்கரமசிங்கவிடம்உறுதியளித்துள்ளார்.

பிரான்ஸின் பாரிஸ் நகரில் நடைபெறுகின்ற'புதியஉலகளாவிய நிதி ஒப்பந்தம்' தொடர்பிலான உச்சி மாநாட்டிற்கு இணையாக இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கமற்றும்ஐக்கியநாடுகள சபையின்பொதுச்செயலாளர்நாயகம்அண்டோனியாகுட்டாரெஸ்ஆகியோரின் சந்திப்பின்போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் புதிய பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளின் முன்னேற்றம், பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகத்திடம் தெளிவுபடுத்தினார்.

நிலையான பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப் படுத்தும்போதும் நீண்டகால பொருளாதார வேலைத் திட்டங்களை முன்னெடுகின்றபோதும் வலுவான நிதிக் கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் அர்ப்பணிப்புடனான முயற்சிகள் பற்றியும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

நிலையான அபிவிருத்து இலக்குகளை மேம்படுத்தும் அதேநேரம் காலநிலையினால் ஏற்படக் கூடிய மோச ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

கடந்த சில வாரங்களாகவே கொழும்பு அரசியலில் பரபரப்பான பேசு பொருள் புலம்பெயர் தமிழரான, முல்லைத்தீவைச் சொந்த இடமாகக் கொண்ட அல்லிராஜா சுபாஸ்கரன் என்கிற வர்த்தகர்தான். லைகா மொபைல் மற்றும் லைகா புரொடக்ஷன் நிறுவனங்களின் தலைவரும் இலங்கையில் செயற்பட்டுவரும் ஞானம் பவுண்டேஷன் என்கிற தொண்டு நிறுவனத்தின் நிறுவுனருமான அவர், இலங்கை டெலிகொம் நிறுவனத்தை வாங்கப் போகின்றார் என்பது கடந்த சில மாதங்களாகவே அடிபட்டுவரும் கதை. ஆனாலும் கடந்த சில நாட்களாக அந்தக் கதை தீவிரமாகி அதற்கு எதிர்ப்பும் கிளம்பத் தொடங்கியிருந்தது.

விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெலிக்கொம்மை விற்பதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கத்தொடங்கியுள்ளனர். அதிலும் விமல் வீரவன்ஸ டெலிக்கொம்மை ☞ 2

## பாடசாலைகளில் ஜப்பானிய மொழி

ஜப்பானிய தொழில் சந்தையை இலக்காகக் கொண்டு ஆரம்ப மட்டத்திலிருந்து பாடசாலை பாடத்திட்டத்தில் ஜப்பானிய மொழியை உள்ளடக்குவதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷநாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்காலத்தில் கல்வி அமைச்சுடன் இணைந்துசிறுவர்களுக்குஜப்பானியமொழியை கற்பிப்பது தொடர்பான செயற்பாடுகள் தயாராகி வருவதாகவும அவர் தெரிவித்தார். ☞ 2

# ஐ.நா. உயர் ஆணையரின் அறிக்கை இலங்கைக்குத் தரப்பட்ட எச்சரிக்கை

### அதனை வரவேற்று சுமந்திரன் எம்.பி. கருத்து

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது அமர்வில் மனித உரிமைகள் உயர் ஆணையரால் முன்வைக்கப்பட்டுள்ள வாய்மொழி மூல அறிக்கை இலங்கை அரசுக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு முன்னெச்சரிக்கை. அதைப் புரிந்துகொண்டு இந்த ஆட்சி செயற்படவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையரின் இலங்கை தொடர்பான வாய்மொழி அறிக்கை மிகக் காட்டமானது என்று வரவேற்றுள்ள அவர், அதனைத் தமது கட்சி முழுமையாக வரவேற்கின்றது என்றும் தெரிவித்தார்.

மிக, முக்கியமாக இலங்கை அரசு தொடர்ச்சியாக பொறுப்புக்கூறல் விடயத்தில் அசமந்தமாகவே நடந்து வருகின்றது என்பதைப் பகிரங்கமாக உயர் ஆணையர் தனது வாய்மொழிமூலமான அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளார்என்பதையும்சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர், பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்து நடைமுறையீல் இருப்பதையும் அது நீக்கப் பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

புதிய பயங்கரவாதத் எதிர்ப்புச் சட்டம் சர்வதேச தரங்களைக் கொண்டதாக காண்பிக்கப்படுகின்றபோதும் அதில் பெரும் அடக்குமுறைகள் காணப்படுகின்றன என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார். புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தற் போதிருக்கும் வடிவத்தில் எதிர்காலத்திலும் நடைமுறைப்படுத்தப்படக்கூடாது என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக ஆட்சியாளர்கள் கூறுகின்றபோதும், ஜனநாயகத்தை மீறும் வகையில் அடக்குமுறைகள் முன்னெடுக்கப்படுவதை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் கட்சிகளுடன் பேச்சுக்கள் ☞ 2

## மின்சாரம் தாக்கி மூதாட்டி இறப்பு

ந.லோகதயாளன்.

பெரியவிளான் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் நேற்றைய தினம் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்.

செந்தில்நாதன் செந்தமிழ்ச் செல்வி என்னும் 60 வயது மூதாட்டியே உயிரிழந்தார்.

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியவிளான் பகுதியில் வசிக்கும் மூதாட்டி வீட்டின் தண்ணீர் மோட்டாரிற்கான மின் அழுத்தியிலேயே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வீட்டில் ☞ 2

## பொலிஸாரிடமிருந்து தப்பிய ஓட்டோ சாரதி சடலமாக மீட்பு!

பொலிஸாரிடமிருந்து தப்பியஓட்டோசாரதிசடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காலி, கராபிட்டிய பிரதேசத்தில் உத்தரவை மீறிச் சென்றஓட்டோமீதுபொலிஸார் அண்மையில் துப்பாக்கிச்சூடு நடத்தியிருந்தனர். அந்த ஓட்டோவின் சாரதி நேற்று காலை பியதிகம பகுதியில் உள்ள ஆலயமொன்றுக்கு அருகில் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காலியில் இருந்து மருதானை நோக்கிப் பயணித்த ரயிலில் தலையை வைத்து அவர் தற்கொலை செய்து கொண்டார்என்றுபொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த நபர் 31 வயதுடையவர் எனவும், ஹபுகல,வக்வெல்லபிரதேசத்தைச் சேர்ந்தவர்எனவும்பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

கடந்த 22ஆம்திகதிகாலி கராபிட்டிய பிரதேச த்தில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது. உத்தரவை மீறிச் ☞ 2

## உலக வங்கி அறிக்கைக்கு மீனவர்கள் கடும் எதிர்ப்பு



யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கள், பாசையூர் கடற்றொழிலாளர் சங்கத்தில் நேற்று ஒன்று கூடினர். வடக்கு கடற்பரப்பில் நீர் வேளாண்மை மேற்கொள்வது தொடர்பில் உலக வங்கி வெளியிட்ட அறிக்கையிலல் கடலட்டைப்பண்ணைகளை உருவாக்குதல் ☞ 2

## நிவாரணப் பட்டியல் இறுதியானது அல்ல

### தனிநபர் உதவிப் பட்டியல் விரைவில் என்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர்

இந்த ஆட்சியின் வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்களுக்கான தற்போதைய நிவாரணப்பட்டியல் இறுதியானது அல்ல என்று பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் நேற்று நடைபெற்றசெய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது

சர்வதேச ☞ 2

## கச்சத்தீவை மீட்கக்கோரி வழக்கு தாக்கல்.

ந.லோகதயாளன்.

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்கக் கோரி இந்தியாவின் மதுரை உயர் நீதிமன்றக்கிளையில்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடுசென்னையில் உள்ளபழையபல்லாவரத்தை கிராமத்தைச் சேர்ந்த பீட்டர் ராயன் என்பவரே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த கச்சத்தீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தப்படி ☞ 2

## நிவாரணத் திட்ட குழப்பத்துக்கு அரச அதிகாரிகளே காரணம்

### திலீபன் எம்.பி. பாய்ச்சல்

அரச ஊழியர்கள் சரியாகச்செயற்படாமையே அரசாங்கத்தின் நிவாரணத் திட்டத்தில் குழப்ப நிலைமைகள் நீடிப்பதாக ஈ.பி.டி.பி.யின் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

வவுனியா பாரதிபுரம் மக்கள் அஸ்வெசும நிவாரணத்திட்டத்தில் உரியவாறான தெரிவுகள் இடம்பெறவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்ட வேளையில் அங்கு பிரசன்னமாகிய நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அஸ்வெசும நிவாரணத் திட்டம் சம்பந்தமாக ☞ 2

## சர்வதேசத்தில் பலம்மிக்க தலைவர் ரணிலைவிட வேறொருவர் இல்லை

### இப்படிச் சொல்கிறார் வஜிர

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவைவிடவும்சர்வதேச அரங்கில்பலம்மிக்கதலைவர் ஒருவர் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கரந்தெனியவில்நேற்று நடைபெற்றநிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கியதேசியக்கட்சிக்கு பாராளுமன்றத்தில் ஒரு ஆசனமே உள்ளது. எதிர்க் கட்சிக்கு 57ஆசனங்கள் உள்ளன. ஆனல் ஐக்கிய தேசியக்கட்சியின்தலைவரே ஜனாதிபதியாக உள்ளார்.

அவர் உலகத்தரம் வாய்ந்த தலைவர் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. தற்பொது ஐரோப்பிய விஜயத்தில் உள்ள அவருடைய சந்திப்புக்களை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் எமது தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அருகில் அமரும் போது அவருடைய குரல் எமதுஜனாதிபதியின்குரலுக்கு மேலாகச்செல்லாது. ☞ 2

## பொது அரசியல் சக்தி ஒன்று அவசியம் என்கிறார் காஞ்சன

அனைத்து அரசியல் கட்சிகளும் உள்ளடக்கிய பொதுச்சக்தியொன்றை உருவாக்க வேண்டியது அவசியம் என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

தெவிநுவர தேர்தல் தொகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் செயற்படும் இந்த ஆட்சியின் செயற்பாடுகள் இந்த நாட்டினை ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லிராஜாவிற்குத்தான் விற்கப்போகிறார்கள் என்று நேரடியாகவே குற்றஞ்சாட்டியிருக்கிறார். லண்டன் மற்றும் பிரானஸ் நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, லண்டனில் அல்லிராஜாவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய விவரங்கள் வெளிவந்ததைத் தொடர்ந்து இந்தக் கதை இன்னும் ஆழமாக ஊன்றப்பட்டு எதிர்ப்புக்களும் கிளப்பப்படுகின்றன.

டெலிக்கொம்மை வாங்குவதில் சுபாஸ்கரனின் லைகா மொபைல்ஸ் நிறுவனம் ஆர்வம் காட்டுவது என்னவோ உண்மைதான். ஆனால் அது மட்டுமே ஆர்வம் காட்டும் நிறுவனம் அல்ல. ஆசியாவின் பெரும் பணக்காரர்களில் ஒருவரான இந்தியவர்த்தகரான முகேஸ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனமும் அதனை வாங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றது. இந்த இரு நிறுவனங்களின் போட்டியில் யார் வெல்லப்போவது என்பது சுவாரஸியமான கேள்வி. சுபாஸ்கரனுக்கு இந்தியாவிலும் பெரும் வர்த்தங்கள் உண்டு. குறிப்பாக பெருநிறுவனப் (கார்ப்பிரேட்) பாணியில் அவர் அங்கு தென்னிந்திய சினிமாவில் பெரு முதலீடுகளைச் செய்திருக்கிறார். தமிழ், தெலுங்கு போன்ற மொழிகளில் பெரும்பாலும் முன்னணி நட்சத்திரங்கள் நடிக்கும் எல்லாப் படங்களையும் லைகாபுரொடக்ஸனே தயாரிக்கிறது என்கிற அளவுக்குப் பெரு முதலீடு அது. அப்படியிருக்கும் நிலையில் பிராந்திய வல்லரசின் ஆட்சியாளர்களுக்கு வேண்டிய இந்திய வர்த்தகரை ஒதுக்கி லைகா டெலிக்கொம்மைக் கைப்பற்றுவது இலகுவானது அல்ல.

அதேநேரம் லைகா டெலிகொம்மை வாங்குவதற்கு முதலே அந்தத் துறை சார்ந்து டெலிகொம்மோடு இணைந்ததான பல வர்த்தகங்களில் ஏற்கனவே கால்பதித்துள்ளது. சில பல தொலைத்தொடர்பு வேலைகளுக்கான ஒட்டுமொத்தகேபிள்விநியோகமும் இலங்கையில் தற்போது லைகா வசமே உள்ளன என்று சொல்லப்படுகின்றது. அதுபோன்றே அலைவரிசைக் கட்டுப்பாட்டு தொழில்நுட்பப் பிரிவிலும் அதனுடைய கரங்கள் உறுதியாக உண்டு. இப்படி இலங்கையின் தொலைத் தொடர்புத் துறையில் ஏற்கனவே ஆழமாகக் காலூன்றியுள்ள லைகா, டெலிக்கொம்மைக் கைப்பற்ற முயன்றதில் புதினம் ஒன்றும் இல்லை.

ஆனால், அது ஒரு போதும் சம்பந்தப்படாத வர்த்தகத்துறை ஒன்றிலும் இலங்கையில் கால்பதிக்க முயற்சிக்கின்றது என்பது தான் புதிய தகவல். இலங்கையில் உள்ள லங்கா வைத்தியசாலையையும் லைகாவிற்கே விற்பதற்காக சுபாஸ்கரனுடன் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன என்பதே புதிய தகவல். ஜனாதிபதியின் லண்டன் பயணத்தின்போது இது தொடர்பிலேயே இருவருக்கும் இடையில் முக்கியமான பேச்சு நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இலங்கையின் ஆட்சியாளர்கள் உடனியாக விற்க விரும்பும் 8 அரச நிறுவனங்களில் இலாபகரமாக இயங்கிவரும் இரண்டு நிறுவனங்கள் டெலிக்கொம் மற்றும் லங்கா வைத்தியசாலை ஆகியனவே. அந்த இரண்டையுமே லைகாவிற்கு விற்கப்போகிறார்கள் என்பதுதான் கொழும்பில் பரப்பைக் கிளப்பியிருக்கும் விடயம்.

இலங்கையின் இரு பெரும் இலாபகரமான நிறுவனங்களையும் புலம்பெயர்தமிழரானசுபாஸ்கரனே வாங்கப்போகிறார் என்பது, போரில் தோற்றுதமிழீழத்தை அடைய முடியாமல்போன தமிழர்கள் பணத்தைக் கொடுத்து மொத்த நாட்டையுமே விலைக்கு வாங்கிவிடுவார்களோ என்கிற கிலியை சிங்கள போலித் தேசியவாதிகளுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. இதன் விளைவு எப்படியிருக்கப் போகின்றது என்பது அடுத்து வரும் வாரங்களில் தெரிய வரும்.

**இடிமின்னல்**
(idiminna23@gmail.com)

## கப்பல்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகத்தை அண்மித்த கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளாகி மூழ்கிய எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்கு கப்பல் விபத்து மற்றும் அது பற்றி சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக விரிவான விசாரணையை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து சாட்சிகளை பெற்றுக் கொள்வதற்கும் நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்கள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்கான நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான பாதிப்புக்களை மட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படவுள்ள நீடிக்கப்பட்ட உபாய மார்க்க திட்டங்களை எடுத்துக்காட்டி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பரிந்துரைக்கமைய முன்னெடுக்கப்படும் 'காலநிலை சுபீட்சத்துக்கான திட்டமிடல்' தொடர்பிலும் செயலாளர் நாயகத்திற்கு விளக்கமளித்தார்.

பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள், கடன் மறுசீரமைப்பு மற்றும் காலநிலை அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்தல் உள்ளிட்ட விடயங்களின் போது இலங்கை மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு இடையிலான ஒத்துழைப்புகளை பலப்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

அதேநேரம் 'புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தம்' தொடர்பிலான இரண்டாம் நாள் அமர்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் கலந்துகொண்டார்.

## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பானிய சந்தையை இலக்காகக் கொண்டு 5000 ஜப்பானிய மொழி பயிற்றுவிப்பாளர்களைக் கொண்ட குழுவை ஆரம்பிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## ஐ.நா. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறுகின்றபோதும் அதில் திருப்திகரமான நிலைமைகளை அடைவதற்கு ஆட்சியாளர்கள் போதியளவில் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவில்லை என்பதும் உயர் ஆணையரின் அறிக்கையில் முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. காணமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளபோதும் அவை திருப்திகரமான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்பதையும் கூற அவர் தவறவில்லை. .

அத்துடன், போர்க் குற்றங்கள் உள்ளிட்ட மனித உரிமைமீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறப்படாது நல்லிணக்கம் சாத்தியமில்லை என்பதையும் உயர் ஆணையரின் அறிக்கை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. ஆகவே, ஆட்சியாளர்கள் பொறுப்புக்கூறலை நிறைவேற்றுகின்ற அதேவேளை, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காணும் முயற்சிகளையும் முன்னெடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பொருளாதார மீட்சியும் சாத்தியமில்லாத நிலைமையே ஏற்படும்.

ஐ.நா. பேரவையின் 54ஆவது கூட்டத்தொடரில் எழுத்துமூலமான அறிக்கையில் அதன் பிரதிபலிப்பை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்வர். ஆகவே உயர் ஆணையாளரின் வாய்மொழி மூலமான அறிக்கையை முன்னெச்சரிக்கையாகக் கொண்டு ஆட்சியாளர்கள் செயற்பட வேண்டியது அவசியமாகும் - என்றார்.

## மின்சாரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளவர்கள் வெளியே சென்றிருந்த நிலையில், குறித்த பெண் தண்ணீர் இறைப்பதற்கு முயன்றுள்ளார். இதற்காக மோட்டாரை இயக்க முற்பட்ட போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவரின் உடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது.

## பொலிஸாரிட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற ஓட் டோ மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். எவ்வாறாயினும், ஓட் டோவில் இருந்த இருவர் அதிலிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

அதன்போது தப்பிச் சென்ற ஓட்டோவின் சாரதியே இன்று (24) தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## நிவாரணப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணய நிதியமும், உலக வங்கியும் தமது நிதியுதவியின் கீழாக பொருத்தமான தரப்பினருக்கு பலன்கள் கிடைக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளன.

தரவுகளைப் பெறுவதில் கள உத்தியோகத்தர்கள் எமக்கு உரிய ஒத்துழைப்புக்களை வழங்காமை துரதிஷ்டவசமான விடயமாகும்.

தற்போது நிவாரணத்திற்கு தெரிவுசெய்யப்பட்டவர்களின் பட்டியலை மாவட்டச் செயலாளர்களும், பிரதேச செயலாளர்களும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தயாரித்துள்ளனர்.

குறித்த பட்டியலானது, குடும்பஅடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது அந்தப் பெயர் பட்டியலே வெளிவந்துள்ளது.

அதேநேரம், தெரிவு செய்யப்பட்டுள்ள தனிநபர்களின் பெயர்பட்டில் அடுத்தவாரம் வெளியிடப்படவுள்ளது. அதேநேரம் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டபோது பல்வேறு தொழிற்சங்கங்கள் இடையூறுகளை விளைவித்தன.

அந்த தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகளை குழப்புவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இவ்வாறான நிலையில், தற்போதைய பட்டியலில் ஆட்சேபனைகள் காணப்படுமாயின் பிரதேச செயலாளர்பிரிவுகளில் முறைப்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## கச்சத்தீவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரம்பரிய மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள இந்திய மீனவர்களுக்கு, இலங்கை நாட்டின் தரப்பில் எந்த வித இடையூறும் செய்யக்கூடாது என்பது நியதியாகும். இருந்தபோதும் கடந்த 1983 முதல் 2013 வரை 111 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். 439 பேர் படுகாயமடைந்துள்ளனர். 136 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு கடந்த 40 ஆண்டுகளாக இலங்கைப் படையினர் மனித உரிமை மீறலில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

இவற்றின்போது மீனவர்கள் கைதும் தொடர்ந்து கொண்டே போகிறது.

தமிழ்நாட்டு பாரம்பரிய மீனவர்களின் உரிமையை நிலைநாட்டவும், பாதுகாப்பை உறுதிபடுத்தவும் இந்த விடயத்தில் ஒன்றிய அரசு தலையிட வேண்டுமென தொடர்ந்து தமிழ்நாடு அரசின் சார்பில் வலியுறுத்தப்படுகிறபோதும் ஒன்றிய அரசு தரப்பில் உறுதியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இதன் தொடர்ச்சியாக தற்போது 22 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்துச்சென்றுள்ளனர். இது ஒப்பந்தத்தை மீறிய செயலாகும். எனவே, 22 மீனவர்களையும் விடுதலை செய்யவும். இந்தியா - இலங்கை இடையிலான கச்சத்தீவு ஒப்பந்தத்தை ரத்து செய்து, கச்சத்தீவை முழுமையாக மீட்கவும் நடவடிக்கை எடுக்குமாறு உத்திரவிட வேண்டும் எனக் கோரியே இந்த வழக்கு 23 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபூர் வாலா நீதிபதி ஆர்.சுப்ரமணியன் ஆகியோர் முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது நீதிபதிகள், 'இரு நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தத்தை ரத்து செய்யும் அதிகாரம் உயர்நீதி மன்றத்திற்கு உள்ளதா' என மனுதாரரின் சட்டத்தரணியிடம் கேட்டனர். இதற்கு அவர், 'இல்லை' என்றார்.. அப்போது நீதிபதிகள். 'அதிகாரம் இல்லாத விவகாரத்தில் எப்படி தலையிட முடியும் என்றனர்.

மத்திய அரசின் துணை சொலிசிட்டர் ஜெனரல் கோவிந்தராஜன் ஆஜராகி, "சர்வதேச கடல் எல்லையை தாண்டி மீன் பிடித்த குற்றத்திற்காக 22 மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் மயிலிட்டி துறைமுகம் சென்று கைதான இந்திய மீனவர்களை சந்தித்து பேசியுள்ளனர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 22 பேரும் ஜுலை 5 வரை நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தேவையான சட்டரீதியான உதவிகளை மேற்கொள்ள தூதரக அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது" என்றார்.

இதனையெடுத்து நீதிபதிகள் மனு மீதான விசாரணை ஜுலை 7 நடக்கும் என்று அறிவித்தனர்.

## சர்வதேசத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதுபோன்று தான் கனடிய பிரதமரும் எமது தலைவருக்கு அருகில் அமரும்போது அவருடைய குரல் ஓங்காது. எமது தலைவர் வலிமையானவர். அவர் உலகத்தரம் வாய்ந்தவர். இந்தச் சிறிய நாட்டை மிகச்சரியான பாதைக்கு கொண்டு செல்லக்கூடிய ஆளுமை மிக்கவர்.

உடகங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் மிகவும் முக்கியமானவையாகும். அவற்றை கொண்டு வரவேண்டும். அமுலாக்க வேண்டும் அது நாட்டின் எதிர்காலத்திற்கு அவசியமானதாகும்.

சிங்கப்பூரில் ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டம் உள்ளது. ஐரோப்பிய நாடுகளில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உள்ளது. உலக நாடுகளில் உள்ள சட்டங்கள் சிறந்தவையாக இருக்கும் போது இலங்கைக்கு மட்டும் அவை எவ்வாறு எதிரானவையாக இருக்க முடியும் என்றார்.

## பொது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றப்பாதைக்கு கொண்டு செல்வதற்கான இலக்கை அடைவதில் வெகுவான தூரம் ஏற்படாது என்று நான் நம்புகின்றேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகள் எமது கொள்கைகளிலிருந்து வேறுபட்டவையாக இருக்கலாம். ஆனால் அக்கொள்கைகளை ஒன்றுபடுத்த வேண்டும்.

குறிப்பாக, மொட்டுக்கட்சி என்றும், யானைக்கட்சி என்றும் இல்லாது இரண்டு தரப்புக்களும் ஒன்றிணைவதோடு ஏனைய கட்சிகளும் ஒன்றிணைந்து பொது அரசியல் சக்தியொன்றை உருவாக்க வேண்டியது அவசியமாகின்றது என்றார்.

# தோணிக்கல் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



வவுனியா தோணிக்கல் கிராம சேவையாளர் பிரிவில் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவு தெரிவில் முறைக்கேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும், இரு நேரம் மட்டும் உணவு



உண்டு வாழும் குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் கிராம மக்கள் நேற்று கண்ணீர்மல்க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆட்சியாளர்களினால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் அண்மையில் வெளிவந்திருந்த நிலையில் வவுனியா தோணிக்கல் கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் இரு நேரம் உணவு உண்டு வாழும் குடும்பங்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள் உட்பட்டவறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களின் பல பெயர்கள் உள்வாங்கப்படாமல் வெளிநாடுகளில் இருப்போர் மற்றும் வசதியானவர்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்து பாதிக்கப்பட்ட கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:



எமது கிராமத்திலுள்ள பாதிக்கப்பட்டவர்களில் 70 சகவீதமானவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படவில்லை. மேலும் வெளிநாடுகளில் இருப்போர், வசதியானவர்களுக்கே கொடுப்பனவுகளின் பெயர்பட்டியல் வந்துள்ளன. இதனைக் கேட்கச் சென்றால் கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் அசண்டையீனமாக பதிலளிப்பதுடன் எமது நியாயமான கோரிக்கைகளையும் செவிமடுப்பதில்லை.

மேலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பெரியவர்கள், முதியவர்கள் எனப்பாராது மரியாதை இன்மையாகவும் கதைக்கின்றார். எமது கிராமத்தில் உண்மையில் கஸ்டப்படுவர்களுக்கு எவ்வித உதவிகளும் கிடைப்பதில்லை எனத் தெரிவித்து கண்ணீர் மல்கி தமது ஆதங்கத்தினை தெரிவித்ததுடன், தமக்குத் தீர்வினைப் பெற்றுத் தருமாறும் கோரினர்.

100

## நிவாரணத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக் களுக்கு போதிய விளக்கம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதேநேரம் குறித்த நிவாரணத்திட்டத்திற்கான தெரிவுகள் முறையாக இடம்பெறவில்லை. குறிப்பாக, அரச உத்தியோகத்தர்கள் நேரடியாக களவிஜயம் செய்து தெரிவுகளைச் செய்திருக்கவில்லை.

அபிவிருத்தி உத்தியோத்தர், கிராமசேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் போன்றவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை மேற்கொண்டன.

இந்தச் சங்கங்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அரசாங்கத்தின் மக்கள் நலத்திட்டங்கள் தடுக்கப்பட்டுள்ளன.

எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும், எந்த மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டாலும் அரச ஊழியர்கள் சரியாகச் செயற்பட வேண்டும். அப்போது தான் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றார்.

## உலக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அட்டை வளர்ப்பு அதன் சாதகத் தன்மைகள் பற்றி மாத்திரமே குறிப்பிட்டுள்ளது என்று தெரிவித்து அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த அறிக்கை தயாரிப்பின்போது கடற்றொழிலாளர்களுடனோ அது சார்ந்த பிரதிநிதிகளுடனோ கலந்துரையாடாமல், பண்ணையால் வரப்போகும் பாதகம் பற்றி குறிப்பிடாமல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது ஏன்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.

இதையடுத்து கடல்வளம் பற்றி பொருளியல் நிபுனரும் சமூக செயற்பாட்டாளருமான ம.செல்வின் தலைமையிலான கலந்துரையாடலிலும் கடற்றொழிலாளர்கள் நேற்று ஈடுபட்டனர். இதில் 17 சங்கங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# கடனில் இருந்து நாட்டை மீட்கமுடியும் ஜனாதிபதி பிரான்ஸில் உறுதியளித்தார்

வேகமாகவும் திறனுடனும் பயணித்தால் மாத்திரமே கடன் சுமைகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாடுகள் எதிர்கொண்டிருக்கும் சமகால நெருக்கடிகளுக்கு தீர்வைக் காணும் வகையில், பிரான்ஸின் பரிஸ் நகரில், புதிய உலகலாவிய நிதி ஒப்பந்தம் எனும் தொனிப்பொருளில் மாநாடு இடம்பெற்றது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்த மாநாட்டில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் -

ஐ.எம்.எப்.பின் கடனுதவித் திட்டம் கிடைக்கும் முன்னர் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வது சிறப்பாக இருக்கும் என்றும் இது தொடர்பாக வழிமுறையொன்றை ஏற்படுத்திவருவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், கடன்வழங்குநர்களுக்கு முக்கியத்துவம் வழங்குவது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கும் ஐ.எம்.எப். உடனான இலங்கையின் செயற்பாட்டுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்தோடு, பொது வேலைத்திட்டத்தின் கீழ் நாம் வேகமாக பயணிக்க வேண்டும் என்று வலியுறுத்திய ஜனாதிபதி, மத்திய வருமானம் கொண்ட நாடு என்ற வகையில், திறனாகவும் வேகமாகவும் பயணித்தால் மட்டுமே கடன் சுமையிலிருந்து மீள முடியும் என்றும் தெரிவித்தார்.

தற்போது கடன் வழங்குநர் நாடுகளுடன் பேச்சுகளை மேற்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதற்கு பரிஸ் கிளப் உறுப்பு நாடுகள் உள்ளிட்ட கடன் வழங்கிய ஏனைய நாடுகளை இணைப்பதுதான் முக்கியமானதாக இருந்தது என்றும் குறிப்பிட்டார்.

இந்தப் பேச்சுகளில் இந்தியா, ஹங்கேரி உள்ளிட்ட நாடுகள் பங்கேற்றன என்றும் சீனா இதில் அவதானிப்பு மட்டத்தில் எமக்கான ஒத்துழைப்பை வழங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேநேரம், இதன்போது தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களை இந்நாடுகளுடன் பகிர்ந்து கொண்டதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்தார். (05)



# இலங்கையுடன் அமெரிக்கா கொண்டுள்ள பங்காண்மை குறிக்கோள் குறைவானதல்ல

## ஜூலீ சங் பெருமிதம்







இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தின் 247 ஆம் ஆண்டு நிறைவினையும், அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான மற்றும் நீடித்த பங்காண்மையின் 75 ஆம் ஆண்டு நிறைவினையும் குறிக்கும் வகையில், ஜூன் 22 ஆம் திகதி கொழும்பில் ஒரு வைபவத்தை நடத்தினார்.

இதில் பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்து கொண்டார்.

அமெரிக்காவின் ஸ்தாபகத் தந்தைகள் 1776 ஆம் ஆண்டு பென்சில்வேனியாவிலுள்ள பிலடெல்பியாவில் சுதந்திரப் பிரகடனத்தில் கையெழுத்திடுவதற்காக ஒன்றுகூடிய ஜூலை 4 ஆம் திகதியை உலகெங்கிலுமுள்ள அமெரிக்க குடிமக்கள் சுதந்திர தினமாகக் கொண்டாடுகிறார்கள்.

அந்தப் பிரகடனத்துடன், வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் மகிழ்ச்சியைப் பின்தொடர்தல் மற்றும் ஆளப்படும் மக்களின் ஒப்புதலுடன் பெறப்பட்ட அரச அதிகாரங்கள் உட்பட சில பராதீனப்படுத்தவியலாத உரிமைகளின் அடிப்படையிலமைந்த தன்னாட்சியை நோக்கி அமெரிக்கா தனது முதல் படியை எடுத்து வைத்தது.

இந்த வைபவத்தில் உரையாற்றிய தூதுவர் சங் -

‘ஒரு நாட்டை அபிவிருத்தி செய்யக்கூடிய விசையாற்றல் மற்றும் தொழில்முயற்சியாண்மை ஆகியவற்றுடன் இணைந்து அதைப் பாதுகாக்கும் அரசியல் மற்றும் சமூகஸ்திரத்தன்மை என்பன சுதந்திரம், தனியுரிமை மற்றும் மகிழ்ச்சியைப் பின்தொடர்தல் ஆகியவற்றிலிருந்தே ஊற்றெடுப்பதாக நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அமெரிக்காவிலும், இலங்கையிலும், மற்றும் எல்லா நாடுகளின் விடயத்திலும் அது உண்மையாகும். எனக் குறிப்பிட்டார்.

அமெரிக்கா, இலங்கையின் மிகவும் பழைமையான பங்காளர்களில் ஒன்று என்பதை முன்னிலைப்படுத்திக்கூறிய தூதுவர் சங், பரஸ்பர மதிப்பீடுகள் மற்றும் நெருக்கமான ஒத்துழைப்பு என்பன இரு நாடுகளும் இணைந்து வெற்றிபெற முடியும் என்பதை நிரூபித்துள்ளன என வலியுறுத்தினார்.

‘அமெரிக்காவின் தேசிய சுதந்திரம் மற்றும் எமது இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டுநிறைவு ஆகியவற்றை நாம் கொண்டாடுகையில், உண்மையில் அனைத்து குடிமக்களுடனும் இலங்கை அரசாங்கத்துடனும் எமக்கிருக்கும் ஒரு குறிப்பிடத்தக்க பங்காண்மையை நாம் கொண்டாடுகிறோம். அமெரிக்கர்களைப் பொறுத்தவரை, எங்கள் ஸ்தாபகர்கள் அதைத் தெளிவாகக் கூறியுள்ளனர், இன்றுவரை, அவர்கள் வகுத்த பாதையை நாங்கள் பின்பற்றுகிறோம் - மிகவும் பூர்த்தியான ஓர் இணைப்பை உருவாக்குவதற்காக எங்கள் அரசமைப்பை நாங்கள் மரியாதையுடன் பின்பற்றுகிறோம். இலங்கையுடன் அமெரிக்கா கொண்டுள்ள பங்காண்மையின் குறிக்கோள் அதற்குச் சற்றும் குறைந்ததல்ல.

அமெரிக்கர்களுக்கும் இலங்கையர்களுக்கும் நன்மைகளை வழங்கும் இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் மற்றும் மக்களுக்கும் இடையிலான உறவுகளில் எங்களது பங்காண்மை செழித்து வளர்கிறது.

1956 ஆம் ஆண்டுமுதல், போசாக்கு, சுகாதாரம், கல்வி, மனித உரிமைகள் மற்றும் ஆட்சி, அனர்த்தங்களின் போதான பதிலளிப்பு மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் யு.எஸ்.எயிட் 2 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான பெறுமதியுடைய உதவிகளை வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டில், இலங்கை பொருளாதார நெருக்கடியின் மத்தியில் இருந்தபோது, விவசாயிகளுக்கு உரம் வழங்கியது முதல் சிறு வணிகங்களுக்கு வழங்கிய நிதி உதவிகள் வரை 270 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான பெறுதியுடைய புதிய உதவிகளை அமெரிக்க அரசாங்கம் வழங்கியுள்ளது.

பல ஆண்டுகளாக நிலையாக வளர்ச்சியடைந்துள்ள எமது இராணுவங்களுக்கிடையிலான உறவு, இருதரப்பு பயிற்சி, பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றங்கள் ஆகிய விடயங்களில் கவனம் செலுத்துகிறது.

இவையனைத்தும் இறுதியில் ஒரு திறந்த, சுதந்திரமான மற்றும் அமைதியான இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை உறுதி செய்வதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய ஒரு மீண்டெழும் தன்மையுடைய படையைக் கட்டமைப்பதற்கு உதவி செய்யும்.

இலங்கை சமூகங்களில் திறன்களை வளர்த்து, வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் உறவுகளை வளர்ப்பதற்காக 500 இற்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டர்கள் தமது வாழ்வின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களை அர்ப்பணித்துப் பணியாற்றியது உட்பட 1962 ஆம் ஆண்டு முதல் மிகப் பெரிய கலாசாரங்களுக்கிடையிலான உறவுகளை உருவாக்குவதற்கு உதவி செய்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் மாத்திரம் 3.3 பில்லியன் டொலர் பெறுமதியான ஏற்றுமதியுடன், இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாக அமெரிக்கா விளங்குகிறது. இலங்கையின் திறமையான மாணவர்கள் தமது கல்விநடவடிக்கைகளுக்காகத் தெரிவு செய்யும் விருப்பத்திற்குரிய இடங்களில் அமெரிக்காவும் ஒன்றாகும்.

கடந்த ஆண்டில் 3,000 இலங்கை மாணவர்கள் அமெரிக்காவிற்கு கல்வி கற்பதற்காகப் பயணித்துள்ளனர். பல நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக ஏனைய கல்வி மற்றும் தொழில் சார் பயிற்சிகளுக்கு அமெரிக்கத் தூதரகம் நேரடியாக உதவி செய்கிறது. கடந்த 75 வருடங்களாக இந்த நிகழ்ச்சிகளில் ஏறக்குறைய 3,000 இலங்கையர்கள் பங்குபற்றியுள்ளனர்.

எதிர்காலத்தில் எமது மக்களுக்கிடையிலான உறவுகளின் இன்னும் பெரிய வளர்ச்சிக்கும்; பொருளாதார, அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்துக்கும் மற்றும் புவியியல் ரீதியாக எவ்வளவு முக்கியமானதாக இப்பிராந்தியம் இருக்கிறதோ அதேயளவு சுதந்திரமாகவும் திறந்ததாகவும் அது இருப்பதற்கும் நாம் கட்டமைத்துள்ள பங்காண்மை அடித்தளமாக அமையும்.

இலங்கையில் அமெரிக்காவின் நட்பு, அர்ப்பணிப்பு மற்றும் உதவி என்பன கடந்த 75 வருடங்களில் கொண்டாடுவதற்குத் தகுதியான பல சாதனைகளைப் படைத்துள்ளன. அந்த நட்பும், அர்ப்பணிப்பும், உதவியும் தொடர்ந்தும் நீடித்திருக்கும் என்பதுடன், ஒன்றாக இணைந்து இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் ஒரு பிரகாசமான எதிர்காலத்தை எம்மால் உருவாக்க முடியும். - என்றார். (05)

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக மஞ்சுளா பெர்னாண்டோ



இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ கடந்த வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோவை நியமிக்க அரசமைப்பு பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றார்.

பதவி நீக்கப்பட்ட முன்னாள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவிற்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# விமானிகளின் பற்றாக்குறைக்கு அரசு தீர்வு வழங்க வேண்டும்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை



ஸ்ரீலங்கன் விமான சேவையில் விமானிகளுக்கான பற்றாக்குறை காணப்படுவதாகவும், இந்த நிலைமை பயணிகளின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விடயம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்த அவர், இது தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 6 மாதங்களின் மட்டும் ஸ்ரீலங்கன் விமான சேவையிலிருந்து 70 விமானிகள் இராஜினாமா செய்துகொண்டுள்ளார்கள்.

ஸ்ரீலங்கன் விமான சேவையில் தற்போது, 260 இற்கும் குறைவான விமானிகளே சேவையில் உள்ளார்கள்.

இவ்வாண்டில் மேலும் 18 விமானிகள் இராஜினாமா செய்து, எமிரேட்ஸ் விமான சேவையில் இணையவுள்ளார்கள்.

எமது நாட்டுக்கு 330 விமானிகள் தேவைப்படும் நிலையில், 260 பேர் மட்டுமே தற்போது பணியில் உள்ளார்கள்.

இது விமானிகளுக்கு கடும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் ஓர் ஆபத்தான விடயமாகும். விமானிகள் தங்களின் பணி நேரம் முடிந்தவுடன், குறிப்பிட்ட நேரத்திற்கு ஓய்வு எடுக்க வேண்டும். இது சர்வதேச சட்டமாகும்.

இது இவ்வாறு இருக்க, விமானிகளின் தட்டுப்பாட்டால் தற்போது பணியிலுள்ள விமானிகளின் ஓய்வு நேரம் மட்டுப்படுத்தப்படும்.

சுற்றுலா காலம் வந்துவிட்டால், இந்த நிலைமை மேலும் மோசமடையலாம். இது சர்வதேச சட்டத்துக்கு முரணானது மட்டுமன்றி, பயணிகளின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதொரு விடயமாகும்.

எனவே, விமானிகளின் பற்றாக்குறைக்கு அரசாங்கம் உரியத் தீர்வை உடனடியாக வழங்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# புத்தர் சிலையை வணங்கி வெளியே வந்த உக்ரேனிய யுவதிக்கு பாலியல் தொல்லை

## 19 வயதான இளைஞர் ஹபராதுவையில் கைது

ஹபராதுவை, பீல்லகொட பிரதேச விஹாரை ஒன்றில் வழிபாடு செய்யச் சென்ற உக்ரேனிய சுற்றுலா பயணியான பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சந்தேகத்தின் பேரில் 19 வயது இளைஞரை ஹபராதுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் உனவட்டுன பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உனவட்டுன பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ள இந்த யுவதி விஹாரைக்குச் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர் கடந்த வியாழக்கிழமை வழக்கம்போல் விஹாரைக்குச் சென்று போதி மரத்தை வழிபட்டுள்ளார்.

அப்போது, குறித்த சந்தேக நபர் அங்கு வந்து புத்தர் சிலையை வழிபட வருமாறு யுவதியை அழைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞரின் அழைப்பின் பிரகாரம், புத்தரின் சிலையை வணங்கிவிட்டு வெளியே வந்தவுடன் யுவதியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு ஓடிவிட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# இரு வாள்களுடன் ஒருவர் யாழ். மானிப்பாயில் கைது!

யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவாலி வடக்கு பகுதியில் வியாழக்கிழமை இரவு இரு வாள்களுடன் 40 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் இரண்டு வாள்களை எடுத்துச் சென்றபோது வீதியில் வைத்து, மானிப்பாய் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கனடா தீர்மானத்தால் பதற்றமடையும் இலங்கைத் தேசியவாத முகாம்

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்கிற கனேடிய அரசின் நிலைப்பாட்டால் நாட்டின் தேசியவாதிகளாகத் தம்மை இனங்காட்டிக்கொள்வோரின் முகாம் குறிப்பாகப் படையினரின் பின்னணியைக் கொண்டிருக்கக்கூடிய முகாம் பதற்றமடைந்திருப்பது தெரிகிறது. அண்மையில் வைகாசி 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி விடுத்த செய்தியில் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்கிற கருத்தை கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூட்டோ வலியுறுத்திக் கருத்துத் தெரிவித்திருந்தார். அதற்கு இலங்கையின் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி உடியாகவே – பாய்ந்து விழுந்து – தனது கண்டனத்தையும் எதிர்ப்பையும் பதிவு செய்திருந்தார். கனேடியத் தூதுவர் அயலுறவுத்துறை அமைச்சகத்துக்கு அழைக்கப்பட்டு இலங்கையின் எதிர்ப்பும் அதிருப்தியும் உத்தியோகபூர்வமாகக் தெரியப்படுத்தப்பட்டும் இருந்தது.

இத்தனைக்குப் பின்னரும் இலங்கையின் தேசியவாதிகள் முகாம்பதற்றமடைந்துஇலங்கைநாடாளுமன்றத்தில், கனடாவின் தீர்மானத்துக்குஎதிராக ஒருதீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்றுஒற்றைக்காலில்நிற்கின்றது. அயலுறவுத்துறைஅமைச்சின் ஊடாக அந்தத் தீர்மானம் கொண்டுவரப்படவேண்டும் என்று அந்த முகாம் அழுத்தம் கொடுத்தது. கொடுக்கின்றது. ஆனால் அயலுறவுத்துறை அமைச்சர் அதற்கு இன்னும் அசைந்து கொடுக்காத காரணத்தால் வெளியிலிருந்து அதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்யத் தொடங்கியிருக்கிறது இந்த முகாம்.

தெற்கில் சிங்களத் தேசிய முகத்தைக் கொண்டவர்கள் நேரடியாக களமிறக்கப்பட்டு எதிர்ப்புப் பதிவு செய்யப்பட்டு வருகையில் வடக்கு கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களில் ஒருசிலரை – என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியாதவர்களை –கொண்டு ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்புப் போராட்டம் போன்றன நடத்தப்படுகின்றன. இதன் பின்னணியில் சீருடையினரின் உளவு அணியினர் இருக்கின்றனர் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

கனடாவின் தீர்மானத்தை சாதாரணமாகக் கடந்துசென்றுவிட முடியாது என்பதில் இலங்கையின் தேசிய முகாம் பிடிவாதமாக இருக்கின்றது. அதற்குக் காரணம் கடனாவைப் பார்த்து வேறு நாடுகளும் அதுபோன்ற தீர்மானங்களுக்குச் சென்றுவிடுமோ என்கிற அச்சம். அப்படி நடந்தால் இங்குள்ள படைத்துறை உயர் அதிகாரிகளும் போரை நடத்திய அரசியல் தலைவர்களும் தனிநபர் பொருளாதாரத் தடைகள், பயணத் தடைகள் உள்ளிட்ட பல்வேறு தடைகளையும் எதிர்கொள்ள நேரிடும், உலக அரங்கில் அவர்கள் இனப்படுகொலையாளிகளாக நிறுத்தப்படுவார்கள் என்கிற அச்சமே அவர்களைப் பதற்றமடைய வைத்துள்ளது.

அப்படி நடப்பது முன்னர், கனடாவின் முடிவை ஏனைய நாடுகளும் பின்பற்றிவிடக்கூடாத வகையில் கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்யவேண்டும் என்று அந்தத் தரப்புக்கள் விரும்புகின்றன. அதுவும் பாதுக்கப்பட்ட தமிழர் தரப்பிலிருந்தும் இனப்படுகொலை நடக்கவில்லை, அல்லது அப்படி நடந்தாலும் அது பற்றிப் பேசுவது இலங்கையில் அமைதியைக் குழப்பும் என்தான கருத்துருவாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் அதனைச் சாதிக்க முடியும் என்று அவை நம்புகின்றன. அது எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பது கேள்விக்குரியது என்பது ஒருபுறம் இருக்க, நடந்தது இனப்படுகொலைதான் என்று ஈழத் தமிழ் இனம் நம்புகின்றது என்பது முக்கியமானது.

இறுதிப் போரின்போது தமிழர்கள் ஒரு சிறு பரப்புக்குள் முடக்கப்பட்டு அவர்கள் மீது வகைதொகையற்ற தாக்குதல்கள் நடத்தப்பட்டதும், உலகில் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகள் வீசப்பட்டதும்சரணடைந்தவர்கள்கொல்லப்பட்டதும், படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் காணாமலாக்கப்பட்டதும் பல லட்சம் மக்கள் முட்கம்பித் தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டதும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளே என்று ஈழத் தமிழ் இனம் உறுதியாக நம்புகின்றது. அதனை அது தொடர்ந்து வெளிப்படுத்தியும் வருகின்றது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளில் பலர் இலங்கையின் நாடாளுமன்றத்திலேயே அதனைப் பல தடவைகள் பதிவு செய்தும் உள்ளனர். உலக அரங்கில், இலங்கையின் நடந்தது இனப்படுகொலை என்று நிரூபிப்பதற்கான முன்முயற்சிகள் தொடர்ந்தும் எடுக்கப்பட்டு வருகின்றன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இனப்படு கொலைக் குற்றத்திற்காக வழக்குத் தொடுப்பதில் ஆர்வம் காட்டப் பட்டு வருகின்றது. அதற்கான முன்னகர்வுகள் மேற்கொள்ளப் பட்டுக்கொண்டே இருக்கின்றன.

நடந்ததுஇனப்படுகொலைஎன்றுஐ.நா.ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் பன்னாட்டு மனித உரிமைகள் சட்டங்கள் உட்பட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் இடம்பெற்றிருப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதை அது ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் தாண்டி சிலருடைய ஆர்ப்பாட்டங்கள் உலகின் பார்வையை மாற்றிவிட முடியாது என்றாலும் அத்தகைய முயற்சிகளுக்கு எதிரானதும், கனடாவின் தீர்மானத்தை ஆதரிப்பதுமான நகர்வுகளைத் தமிழர் வெளிப்படுத்துவதன் அவசியமும் அவசரமும் உணரப்படவேண்டியவை.



# ஆன்மீக புரட்சியை ஏற்படுத்திய ஆயிரம் வேல்களுடனான யாத்திரை

விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா

வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம கந்தன் ஆலய ஆடிவேல்விழா உற்சவத்திற்காக வரலாற்றில் முதல் தடவையாக மேற்கொள்ளப்பட்ட ஆயிரம் வேல்கள் தாங்கிய அடியார்களுடனான மாபெரும் வேல் யாத்திரை வெற்றிகரமாக நிறைவடைந்தது.

1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் கதிர்காமம் நோக்கி ஜூன் 14 பிற்பகல். இரண்டு மணியளவில் உகந்தை மலை முருகன் ஆலயத்தில் இருந்து சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் தொடங்கியது.

இந்தமாபெரும்வேல்யாத்திரையை வேலோடுமலை முருகன் ஆலயத்தின் ஆதீனகர்த்தா முருகஶ்ரீ தியாகராஜா ஆசிரியர் வேல்சாமியாக இருந்து இவ்வருடம் முதல் யாத்திரையைத் தலைமையேற்று நடத்தினார்.

திருமூலர் பெருமானின் அருளாசியுடன், சித்தர்களின் குரல் சிவசங்கர் குருஜியின் நேரடி வழிகாட்டலின் கீழ் இந்த வேல் யாத்திரை, கதிர்காமம் நோக்கி கந்தனை தரிசிக்க வேலோடு மலையில் இருந்து அரோஹரா கோசம் விண்ணைப் பிளக்கத் தொடங்கி அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்து அங்கிருந்து, உகந்தை முருகன் ஆலயத்தை அடைந்து அங்கிருந்தும் பயணப்படத் தொடங்கியது.

பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்ட ஆறு நாட்களிலும் யாத்திரீகர்கள் அனைவருக்கும் மூன்று வேளை சாத்வீக உணவும், இரண்டு வேளை தேனீரும் இலவசமாக வழங்கப்பட்டன. இதனால சுமார் 1500 யாத்திரீகர்கள் பயன்பெற்றனர். சித்தர்கள் குரல் அமைப்பின் நளபாகச் சக்கரவர்த்தி மதியண்ணா தலைமையிலான குழுவினர் சிறப்பாக அலுப்பில்லாமல் விருப்புடன் செயற்பட்டு அனைவருக்கும் உணவு பரிமாறினார்கள். .

அனைத்து ஏற்பாடுகளையும் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத் தலைவர் மனோகரன் ஆகியோரின் நேரடி ஏற்பாட்டின் கீழ் வெற்றிகரமாக நடைபெற்றது.

தினமும் தரித்து நின்ற ஒவ்வொரு இடங்களிலும், சக்தி வாய்ந்த வேல் பூஜை அபூர்வ வனமூலிகைகளினால் சர்வவல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வி, வன பூஜை, வன போஜனம், மூலிகைக்குளியல், ஒருகோடிசண்முக பஞ்சாட்சர ஜெபம், கூட்டு வழிபாடுகள், நமது கர்ம வினைகளை கரைக்கும் அற்புதமான தியானங்கள், திருப்புகழ் பாராயணங்கள் இடம் பெற்றன.



அனைத்து வேல் அடியார்களும் காவிவஸ்திரங்கள்தரித்துஅணிவகுத்து சென்றமைபக்திப்பரவசத்தைஊட்டியது. இவை அனைத்தையும் சித்தர்கள் குரல் அமைப்பின் படப்பிடிப்பாளர் வீரமுனை கஸ்தூரன் தத்ரூபமாக படமாக்கியிருந்தார்.

பாதயாத்திரை என்றால் இப்படித்தான் பக்தி முக்தியாக பயபக்தியுடன் ஆசாரசீலத்துடன் செல்லவேண்டும் என்பதை இந்த வேல் யாத்திரை பலருக்கும் உணர்த்தியது.





கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பாதயாத்திரையை ஆரம்பித்த பக்தர்கள் கதிர்காம திருத்தலத்தை அடைந்து வருகின்றனர்.

பாதயாத்திரையானது குமண வன பறவைகள் சரணாலய காட்டு-வழி பாதையூடாக ஆரம்பிக்கப்பட்டு 6 நாட்களில் 18 யாக பூசைகள் புனித கங்கைகளின் அபிடே&கங்களுடன் இடம் பெற்றன. அனைத்தும் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜீ தலைமையில் நமசிவாய சுவா மியின் பங்கேற்றலுடன் சிவாகம முறைப்படி பிரமாண்டமாக இடம்பெற்றன. தினமும் நடுநிசி 12 மணிக்கு விசேட யாகம் நடுக்காட்டில் ஆறு இடங்களிலும் நடைபெற்றமை பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. குறித்தயாத்திரையின்போது தாம் கந்தனை உணர்ந்ததாக யாத்திரிகர்கள் பக்திப் பரவசத்துடன் தெரிவித்திருந்தனர்.

கதிர்காமத் திருத்தலத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலில் கடந்த ஜூன் 19 மாலை 5.00 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்றது. சர்வமதத் தலைவர்கள், கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே டிான் குணசேகர உள்ளிட்ட அதிகளவிலான பக்தர்களும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

கதிர்காமக் கந்தனின் வருடாந்த ஆடிவேல் திருவிழாவில் இந்த ஆண்டுக்கான முதலாவது திருவீதி உலா (பெரஹறா) ஜூன் 19 நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. கதிர்காம கந்தனின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி மாணிக்க கங்கையில் நடைபெறவுள்ள நீர்வெட்டும் நிகழ்வுடன் நிறைவு பெறவுள்ளது.

மொத்தத்தில் இம் முறை முதல் தடவையாக இடம் பெற்ற வேல் யாத்திரை ஓர் ஆன்மீக புரட்சியை ஏற்படுத்தியது என்றால் மிகையல்ல.






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பல்கலை வாய்ப்புக் கிடைத்துள்ள மாணவர்களுக்கு வட்டியில்லாகடனை விரைவில் பெற்றுக்கொடுப்போம்

## பிரதமர் தினேஷ் உறுதி



நிதி பிரச்சினையை முகாமைத்துவம் செய்துகொண்டு, அரச பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாத்திரமல்லாது, தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வட்டியில்லா கடன் வசதியை பெற்றுக்கொடுக்க மிக விரைவில் நடவடிக்கை எடுப்போம். அது தொடர்பில் தற்போது கலந்துரையாடி வருகிறோம் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கை யிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்கப்பெறும்மாணவர்களுக்கு பட்டம்வழங்கும்கல்விநிறுவனங்களில் உயர்கல்வியை தொடருவதற்கான வட்டியில்லா கடன் வழங்கும் திட்டம் தொடர்பாக கல்வி அமைச்சர் இந்த சபைக்கு இதற்குமுன்னர்அறிவித்திருந்தார்.

அதேநேரம்கல்விஅமைச்சரால் அமைச்சரவைக்கு இது தொடர்பில் சமர்ப்பித்திருந்த அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கி இருந்தது.

அதன்பிரகாரம்தற்போது இதுதொடர்பான நிதி ஒதுக்கீடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தை விரைவாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகிறது. நான் கல்வி அமைச்சராக இருந்த குறுகிய காலத்தில் தனியார் பல்கலைக்கழகங்கள் பலவற்றுக்கு இந்த திட்டத்தின் கீழ் நாங்கள் பணம் வழங்கி இருந்தோம். இந்த நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கும் கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் நடவடிக்கை எடுத்திருந்தோம்.

எனவே தற்போது உள்ள நிதி பிரச்சினையை முகாமைத்துவம் செய்துகொண்டு, அரச பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாத்திரமல்லாது, தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வட்டியில்லா கடன் வசதியை பெற்றுக்கொடுக்க மிக விரைவில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறோம். - என்றார். (05)

# அரச நிவாரண வழங்கல் தகுதியானவர்களுக்கு கிடைக்கப் பெறுகின்றதா என்பதில் சந்தேகமாம்

## ரோஹித அபேகுணவர்தன கூறுகின்றார்



அஸ்வெசும நிவாரண செயற்திட்டம் தொடர்பில் பல முறைபாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. நிவாரணம் பெற்றுக் கொள்ளத் தகுதிடையவர்கள் இந்தத் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆகவேநிவாரணபயனாளர்கள்தெரிவுமீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையை வருமாறு -

அரசாங்கத்தால் வழங்கப்படும் நிவாரணங்கள் தகுதியானவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என சர்வதேசநாணயநிதியம்தெளிவாக அறிவுறுத்தியுள்ளது.

அரச நிவாரண வழங்கல் உண்மையில் தகுதியானவர்களுக்கு கிடைக்கப் பெறுகிறதா என்பது சந்தேகத்துக்குரியது. அஸ்வெசும நிவாரணதிட்டத்தில்நீரழிவு நோயாளர்கள், விசேட தேவையுடையவர்கள்புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

செல்வந்த தரப்பினர் நிவாரண திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளர்கள். ஆகவே இந்த செயற்திட்டம் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சமூக கட்டமைப்பில் ஏழ்மைநிலையில் உள்ளவர்களுக்கு முறையாக நிவாரணம் வழங்காவிட்டால் ஏழ்மைநிலைதீவிரமடையும்.

ஆகவே அஸ்வெசும செயற்திட்டத்தில் உள்ள குறைபாடுகளை திருத்திக் கொள்ளுமாறுஅரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம்என்றார். (05)

# சமூகக் கட்டமைப்பில் பாரிய முரண்பாடு தோற்றம்பெறும்!

## ஜெகத் குமார் சுமித்ராராச்சி தெரிவிப்பு

அஸ்வெசும நிவாரண செயற்திட்டம் சமூக கட்டடைப்பில் பாரிய முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும். ஏழ்மையில் நிலையில் உள்ளவர்கள் இந்த செயற்திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

ஆகவே முறையான மதிப்பீட்டை மேற்கொள்ளும் வரை அஸ்வெசும செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்த வேண்டும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத் குமார் சுமித்ராராச்சி அரசாங்கத்திடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றியவை வருமாறு -

சமூக கட்டமைப்பில் தீவிரமடைந்துள்ள ஏழ்மை நிலையை இல்லாதொழிக்க அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள அஸ்வெசும செயற்திட்டம் சமூகக் கட்டமைப்பில் பாரிய முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் உள்ளது.

தகுதியானவர்களுக்கு மாத்திரம் நிவாரண தொகை வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டது. அஸ்வெசும நிவாரண செயற்திட்டத்தில் நிவாரணம் பெறுவதற்குத் தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டுள் ளார்கள்.

தகுதியற்ற செல்வந்தர்கள் நிவாரணத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். ஆகவே இந்தத் திட்டத்தில் உண்மையான தரப்பினர் அடையாளப்படுத்தப்படவில்லை.

நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்து புறக்கணிக்கப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்யலாம் என நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.மேன்முறையீட்டுக்கான கால அவகாசம் நீடிக்கப்பட வேண்டும்.

குளறுபடிகளுடன் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தினால் சமூகக் கட்டமைப்பில் பாரிய முரண்பாடுகள் தோற்றம் பெறும்.

ஆகவே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வரை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்தவேண்டும். - என்றார். (05)

# பல சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 22 வயதுடையவர் துப்பாக்கிச் சூட்டில் பலி!

எம்பிலிபிட்டிய, பனாமுர, வெலிக்கடையாய பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 22 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தநபர் பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற அடிப்படையில் அவரைக் கைது செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, குறித்த நபர் பொலிஸ்விசேடஅதிரடிப்படை அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

இதையடுத்து, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சந்தேக நபர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறுஉயிரிழந்தவர் முன்னாள் இராணுவவீரர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் மினுவாங்கொடை பெஸ்டியன் மாவத்தை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் அம்பலாங்கொடையில் பிரதி அதிபர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகம் ஆகியவற்றுடன் தொடர்புடையர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிபிட்டிய பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# இலங்கையின் பாரிய மனித புதைகுழிகள் தொடர்பாக சர்வதேச கண்காணிப்பு மேற்பார்வையில் விசாரணை

## ஐந்து அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள்

இலங்கையின் உள்நாட்டுமோதல்களின்போதுகாணாமல்போனவர்களின் உடல்கள் காணப்படலாம் என சந்தேகிக்கப்படும் பாரிய மனித புதைகுழிகள் குறித்து இலங்கை அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என ஐந்து மனித சிவில் சமூக அமைப்புகள் வேண்டுகோள்விடுத்துள்ளன.

கடந்தகால குற்றங்களைக் கையாள்வது தொடர்பாக இலங்கை அரசாங்கம் உண்மையான தீவிரமான ஆர்வத்தை கொண்டிருந்தால் அனைத்து மனித புதைகுழிகளையும் சர்வதேச நிபுணர்களின் மேற்பார்வையில் இலங்கை அரசாங்கம் தோண்டவேண்டும் என ஐந்து சிவில் சமூக அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

மனிதபுதைகுழிகள் குறித்து கடந்தகாலங்களில் இடம்பெற்ற விசாரணைகள் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள ஐந்துஅமைப்புகளும் இலங்கை அர சாங்கம் இந்த விசாரணைகளில்எவ்வாறுதலையிட்டன என்பது பற்றிய முழுமையான அறிக்கையை வெளியிட்டுள்ளன.

கொழும்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தெளிவான பார்வையில்- இலங்கையில் மனித புதைகுழியின் பின்னால் - உண்மையை தேடுதல் என்ற விவரணச்சித்திரமும் வெளியிடப்பட்டது - இந்த விவரணச்சித்திரம் காணாமல்போனவர்களின் உறவுகள் எவ்வாறு நீண்ட போராட்டத்தை முன்னெடுக்கின்றனர் என்பதை விவரிக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்தில் பணியாற்றியவேளை- மாத்தளை பகுதியில் நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல்போனார்கள் அவ்வேளை அவர் அந்த பகுதியின் இராணுவ அதிகாரியாகக் காணப்பட்டார்.

பின்னர் ஜனாதிபதி ஆணைக்குழு அவரது பெயரையும் தனது விசாரணைகளின் போது குறிப்பிட்டிருந்தது என ஐந்து அமைப்புகளும் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளன. (05)

# பொதுநலவாய நாடுகளின் பொது செயலரை சந்தித்தார் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்க!



பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளர் பெட்ரிசியா ஸ்கொட்லண்ட் மற்றும் பிராங்கோபோன் அமைப்பின் செயலாளர் நாயகம் ஆகியோரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடினார். (05)

# யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகத்தை சந்தித்து ஜனாதிபதி கலந்துரையாடினார்!



பாரிஸில் உள்ள யுனெஸ்கோ தலைமையகத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடலில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# வைத்திய நிபுணர்களுக்கு நாட்டில் பெரும் தட்டுப்பாடு!

விசேட மருத்துவநிபுணர்கள் வெளிநாடுகளிற்கு புலம்பெயர்ந்துள்ளதாலும் ஏனைய சிலரை சர்வதேச பல்கலைகழகங்கள் உள்வாங்குவதாலும் இலங்கையின் சுகாதார துறை நெருக்கடிகளை எதிர்கொள்ளநேரிடும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை சமீபத்தில் வைத்தியர்களின் ஓய்வுவயது எல்லையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றமும் இதற்குக் காரணமாக உள்ளது எனவும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

2024 இல் நாட்டிற்கு 4229 விசேட வைத்திய நிபுணர்கள் தேவை என சுகாதார அமைச்சு மதிப்பிட்டுள்ளது எனினும் இடமாற்றம் அடிப்படையிலான புள்ளிவிவரங்கள் 750 வெற்றிடங்களை உடனடியாக நிரப்பவேண்டியுள்ளதை புலப்படுத்தியுள்ளன.

இருதயநோய் நிபுணர்கள், நுண்ணுயிரியல் நிபுணர்கள், தோல்நோய் நிபுணர்கள், அவசரகால மருத்துவர்கள், மயக்கவியல்நிபுணர்கள்போன்றவர்களிற்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அதிகாரிகள்உடனடிநடவடிக்கைகளை எடுக்காவிட்டால் அடுத்த ஆண்டு 1000 இற்கும் மேற்பட்ட வைத்தியர்களுக்கான தேவை ஏற்படலாம் என நிபுணர்கள் தொடர்ந்து எச்சரித்து வந்த நிலையிலேயே இந்த தகவல்கள் வெளியாகின்றன.

இலங்கையில்தற்போது 2007 விசேட வைத்திய நிபுணர்களே உள்ளனர் இது பொதுமக்களின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமானதல்ல எனவும்நிபுணர்கள்தெரிவித்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# உதவித்திட்ட முறைகேட்டுக்கு எதிராக ஒன்று திரண்டார்கள் பாரதிபுரம் மக்கள்

## சம்பவ இடத்துக்கு விரைந்த நாடாளுமன்ற உறுப்பினர்

நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்து வவுனியா பாரதிபுரம் கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்துக்கு தயாரான போது நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் வருகை தந்து அம்மக்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

அரசாங்கத்தால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் அண்மையில் வெளிவந்திருந்த நிலையில் வவுனியா பாரதிபுரத்தில் விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள் உட்பட்ட வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படாமல் வெளிநாடுகளில் இருப்போர், வசதியானவர்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவித்து கிராம அபிவிருத்தி சங்க வளாகத்தில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட பிரதேச மக்கள் முற்பட்டனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் அங்கு கூடியிருந்த மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரால் பிரதேச செயலாளருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியதுடன் பெயர் விவரம் வராதவர்களின் முறைப்பாட்டுக் கடிதங்களை எழுதி பிரதேச செயலாளரிடம் கையளிப்பதுடன் தன்னிடமும் பிரதியொன்றை தருமாறு தெரிவித்தார். இதனையடுத்து அங்கிருந்தவர்கள் கலைந்துசென்றனர். (05)

# ஒவ்வொரு முறையும் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாமற் போகிறது

## உறவுகள் கவலை

ஒவ்வொரு ஜெனிவா கூட்டத் தொடரின் போதும் தமக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருந்தாலும் ஆனால் அந்த நம்பிக்கை அடுத்த நிமிடமே இல்லாது போவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் இம்முறையாவது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (சனிக்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர், 15 வருடங்களாக வீதியில் இறங்கி போராடி வரும் தமக்கு இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என்றும் இதன் காரணமாகவே ஐ.நா. சபை எதிர்நோக்கி காத்திருப்பதாகவும் குறிப்பிட்டடார்.

நீதிக்காகப் போராடிக்கொண்டு இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் ஓ.எம்.பி. அலுவலகத்தை கொண்டுவந்து இழப்பீடு தருவதாகக் கூறப்பட்டுள்ளதே தவிர இதுவரை குறித்த அலுவலகத்தால் எவ்வித பிரயோசனமும் இல்லை ஏறும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்நாட்டு பொறிமுறையில் எவ்வித நம்பிக்கையும் இல்லை, சர்வதேசம் தமது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்றாலும் அவர்கள் தம்மை திரும்பி பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டு உள்ளமை வேதனையை தருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (05)

# வீட்டை எரித்த யுவதி சடலமாக மீட்பு

## பொலிஸார் தீவிர விசாரணை

தாயாருடன் வசித்து வந்த இளம் யுவதி ஒருவர் தமது வீட்டைத் தீயிட்டுக் கொளுத்திய பின்னர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

காலி மாவட்டம், கரந்தெனிய பிரதேசத்தில் தாயாருடன் வசித்து வந்த 22 வயதுடைய ரி.ஜே.மாளவிகா என்ற யுவதி, வெள்ளிக்கிழமை இரவு தாயார் வீட்டுக்குள் இருந்தவேளை வீட்டைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டுத் தலைமறைவாகியுள்ளார்.

வீட்டுக்குள் சிக்கிய தாயார் காயங்கள் எதுவுமின்றி வெளியில் தப்பியோடி வந்து அயலவர்களின் உதவியைக் கோரியுள்ளார்.

அயலவர்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்ட போதிலும் வீட்டில் இருந்த பெரும்பாலான எரிந்து நாசமாகியுள்ளன.

தீ அணைக்கப்பட்ட பின்னர் அயலவர்களின் உதவியுடன் காணாமல்போன மகளைத் தாயார் தேடியுள்ளார்.

அவ்வேளை வீட்டுக்கு அருகில் உள்ள பாழடைந்த வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் மாளவிகா சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காதல்தோல்வியால் ஏற்பட்ட மனநோயால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த யுவதி, கடந்த நான்கு மாதங்களாக அந்த நோய்க்குச் சிகிச்சை பெற்று வந்திருந்தார் என்று அவரின் தாயார் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

எனினும், சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், பிரேதபரிசோதனையின் பின்னரே யுவதியின் மரணம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த யுவதியின் தந்தை கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கடன் தொல்லையால் உயிரை மாய்த்திருந்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# ஹெரோயினுடன் வசமாகச் சிக்கிய தனியார் கல்வி நிலைய ஆசிரியர்!

தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - பொரளையில் உயர்தரப் பிரிவு மாணவர்களுக்குக் கற்பிக்கும் 31 வயதுடைய ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் நேற்றுக் காலை காரில் சென்றபோது வெல்லம்பிட்டியவில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதாகும்போது அவரிடமிருந்து 350 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அக்காவும் தம்பியும் லொறி மோதி சாவு!

*வீதி விபத்தில் சகோதரர்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.*

*இந்தச்சம்பவம் அம்பாந்தோட்டை மாவட்டம், பெலியத்தை பிரதேசத்தில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.*

*சந்தையில் மரக்கறி வாங்க வீதியில் நடந்து சென்ற சகோதரர்கள் இருவர் மீது பின்னால் வேகமாக வந்த லொறி மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலும், மற்றையவர் வைத்தியசாலையிலும் உயிரிழந்துள்ளனர்.*

*14 வயதுடைய எம். தரங்க என்ற சகோதரன் சம்பவ இடத்திலும், 20 வயதுடைய எம்.டில்ஷிகா என்ற சகோதரி வைத்தியசாலையிலும் சாவடைந்துள்ளனர்.*

*லொறியின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

# உல்லாச விடுதியில் இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை; இருவர் கைது

உல்லாச விடுதியொன்றில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் போது ஏற்பட்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பட்டபொல பராதுவ பகுதியில் உள்ள உல்லாச விடுதியொன்றில் சனிக்கிழமை அதிகாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாள்வெட்டுக்குள்ளான குறித்த நபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

பட்டபொல கொபெயிதுடுவ பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய பொன்னம்பெரும ஆராச்சிகே எனும் நுவன் சம்பத் என்பவரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் பராதுவ, பட்டபொலவில் அமைந்துள்ள உல்லாச விடுதியில் பலர் மது அருந்திக் கொண்டிருந்த போது அங்கு மது அருந்திய மற்றுமொரு குழுவினருக்கிடையில் தகராறு ஏற்பட்ட நிலையில், அது மோதலாக மாறியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மோதலின் போது உயிரிழந்த நபர் மீது இருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான நபர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் சிறிது நேரத்தின் பின் அவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த தாக்குதல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகத்தின் பேரில் தாக்குதலுடன் தொடர்புடைய இருவர் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இந்தியாவின் பாதுகாப்பில் நாம் கரிசனை கொள்வோம் ஒரு நாட்டுடன் மட்டும் சேர்ந்து செயற்பட மாட்டோம்

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி திட்டவட்டம்

இலங்கை இந்தியாவின் நியாயபூர்வமான பாதுகாப்பு கரிசனைகளைக் கருத்தில் கொள்ளும் ஆனால் ஒரு நாட்டுடன் மாத்திரம் சேர்ந்து செயற்படாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது நாட்டுக்கும் மக்களுக்கும் எது மிகசிறந்ததோ அதனை செய்யும் என அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்தவாரம் சீனாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள வெளிவிவகார அமைச்சர் டெய்லிமிரரின் ஒன்பயருக்கு வழங்கிய பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கேந்திர அமைவிடம் சர்வதேச வல்லரசுகளுடனான அதன் நெருங்கிய உறவுகளுக்குப் பல வாய்ப்புகளை வழங்குகின்றன என அமைச்சர் தெரிவித்துள்ளார்.



அனைவரும் இலங்கை மீது செல் வாக்குச் செலுத்துவதற்கான முயற்சி களை மேற்கொள்வார்கள். ஆனால் நாங்கள் இந்தப் பாதையில் மிகவும் அவதானமாகப் பயணித்து இந்து சமுத்திரம் எப்போதும் அமைதிப் பிராந்தியமாக விளங்கும் நிலையை ஏற்படுத்தவேண்டும். அனைவருக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டும் என அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியா இலங்கையின் மிகப்பெரிய அயல்நாடு என்பதை இலங்கை எப்போதும் மனதில் வைத்திருக்கும் எனவும் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர், இந்தியா வெளிப்படுத்தும் எந்த நியாயபூர்வமான பாதுகாப்பு கரிசனைகளையும் இலங்கை கருத்தில்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நியாயபூர்வமான கரிசனைகள் என்பது சீனாவின் கப்பல்களை திருப்பி அனுப்புவதையும் உள்ளடக்கியதா என்ற கேள்விக்கு ஊகங்களிற்கு பதிலளிக்க விரும்பவில்லை என அலிசப்ரி தெரிவித்துள்ளார். (05)

# கொலைச் சந்தேகநபர் ஒருவர் சுட்டுக்கொலை

## எஸ்.ரி.எப். மீதும் தாக்குதல் நடத்த முற்பட்டாராம்

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 22 வயதுடைய கொலைச் சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் எம்பிலிப்பிட்டிய, பனாமுர, வெலிக்கடையாய பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்த நபர், பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் நேரடித் தொடர்புடையவர் என்ற அடிப்படையில் அவரைக் கைது செய்வதற்காக இன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, குறித்த நபர் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

இதையடுத்து, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் சந்தேகநபர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் முன்னாள் இராணுவச் சிப்பாய் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மினுவாங்கொடை பெஸ்டியன் மாவத்தை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் அம்பலாங்கொடையில் பிரதி அதிபர் ஒருவா மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் உள்ளிட்ட பல துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களுடன் நேரடித் தொடர்புடையர் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வங்கி முகாமையாளருடன் வாடிக்கையாளர் முறுகல்

## கைதானவருக்கு விளக்கமறியல்



அரச வங்கியொன்றின் முகாமையாளருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து குறித்த வாடிக்கையாளர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொகவந்தலாவை நகரில் அமைந்துள்ள அரச வங்கியொன்றுக்கு சென்ற குறித்த வாடிக்கையாளருக்கும் வங்கி முகாமையாளருக்கும் இடையில் வியாழக்கிழமை பிற்பகல் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது.

வங்கி முகாமையாளரின் அறிவிப்பை அடுத்து பொகவந்தலாவை பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சந்தேகநபரை கைது செய்ய முற்பட்ட போது அங்கு கூடியிருந்தவர்கள் கடும் எதிர்ப்பை வெளிட்டனர்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அறிவிப்பிற்காகவா 30 ஆம்திகதி விசேட விடுமுறை

## வர்த்தக சமூகத்தினர் மத்தியில் குழப்பம்

அரசாங்கம் 30 ஆம் திகதி விசேட வங்கி விடுமுறையை அறிவித்துள்ளதை தொடர்ந்து 28 ஆம் திகதி உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைள் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை அரசாங்கம் வெளியிடவுள்ளதா என்ற சந்தேகம் வர்த்தக சமூகத்தினரிடையே எழுந்துள்ளது. விசேட வங்கி விடுமுறை காரணமாக நாட்டின் நிதிசந்தைகள் ஐந்து நாள்களிற்கு தொடர்ச்சியாக மூடப்படும் .

ஜூன் 29 ஆம் திகதி மூன்றாம் திகதி முதல் வங்கிகள் மூடப்படவுள்ளதால் அரசாங்கம் உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு குறித்த நடவடிக்கைகளை அறிவிக்கவுள்ளது என்று ஊகங்கள் வெளியாகியுள்ளன. உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு என்பது எதிர்மறையான விடயமாகக் கருதப்படுகின்றது. இதன் காரணமாக அரசாங்கத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து வங்கிகள் ஆய்வாளர்களிடமிருந்து எதிர்மறையான கருத்துக்கள் வெளியிடவுள்ளனர்.

எனினும் இந்த ஊகங்களை மறுத்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர் கொன்சேமசிங்க நாடாளுமன்ற அனுமதி இல்லாமல் உள்நாட்டு பொறிமுறை குறித்த அறிவிப்பு வெளியாகாது எனவும் குறிப்பிட்டுள்ளார். (05)

# இளைஞரைக் கடத்தி கப்பம் கோரிய மூவருக்கு 30 வரை விளக்கமறியல்!

கொழும்பு - காலிமுகத்திடலில் நபர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்குதல் நடத்திப் பணம் கோரிய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட மூன்று பேரும் ஜூன் 30 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் முற்படுத்தியபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள், பக்கமுன பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கடந்த 21 ஆம் திகதி கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, தமது மகன் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் எனவும், அவரை விடுவிக்க 10 இலட்சம் ரூபாவைக் கடத்தல்காரர்கள் கோருகின்றனர் எனவும் அவரின் தந்தை பொலிஸில் தாக்கல் செய்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

# நெதர்லாந்து பிரதி பிரதமர், நிதியமைச்சரை சந்தித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க!



ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க நெதர்லாந்தின் பிரதிப் பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் சிக்ரிட் காக் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது, ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும்ஜனாதிபதியின்தலைமை அதிகாரியுமானசாகலரத்நாயக்க மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (05)

# ஆசிரியர் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஹற்றன் கல்வி வலயத்தில் பாரிய போராட்டம்

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட ஹற்றன், செனன் தமிழ் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக அப் பாடசாலையில் கல்விபயிலும்மாணவர்களின்பெற்றோர் வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பாடசாலையில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடும் 15 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப்போராட்டம்முன்னெடுக்கப்பட்டது.

செனன் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர் எனவும், பாடசாலையின் கல்விப் பெறுபேறுகள் தற்போதுசிறந்தமட்டத்தில்இருப்பதாகவும் பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

'இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள 15 ஆசிரியர்களில் அறுவர் ஆரம்ப பிரிவைச் சேர்ந்தவர்கள், ஏனையவர்கள் சாதாரண தரம் மற்றும் உயர் தரம் கற்பிக்கும் ஆசிரியர்கள். முக்கிய பரீட்சைகள் நெருங்கும் நிலையில் ஆசிரியர்களுக்கு இவ்வாறு திடீரென வழங்கப்பட்டுள்ள இடமாற்றமானது



மாணவர்களின் கல்வியில் தாக்கம் செலுத்தும்.' எனவும் பெற்றோர்கள் குறிப்பிட்டனர். இது தொடர்பில் ஹற்றன் வலய கல்வி அலுவலக சிரேஷ்ட அதிகாரி ஒருவரிடம் வினவியபோது, 'கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களின் பிரகாரமே ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது எனவும், இதற்கு பதிலாக விடயதானங்களுடன் தொடர்புபட்ட ஆசிரியர்கள் அப்பாடசாலைக்கு அனுப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டார். (05)

# குழந்தை பிரசவித்த பெண் சாவு: உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

பேராதனை வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு குழந்தை பிரசவித்த பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும், இந்த மரணத்தில் ஏதேனும் தவறிழைக்கப்பட்டிருந்தால் அதனுடன் தொடர்புடையவர்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பேராதனை வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மூலம் குழந்தை பிரசவித்த தாயொ ருவர், தவறான மயக்க மருந்து பயன்படுத்தப்பட்டதால் உயிரிழந்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

குறித்த செய்திகள் தொடர்பில் விளக்கமளிக்கும் போது இதனைத் தெரிவித்துள்ள அமைச்சர் மேலும்



குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

மருந்துகளை நான் இறக்குமதி செய்யவில்லை. எனவே அது தொடர்பான தொழிநுட்ப காரணிகளை என்னால் விளக்க முடியாது. எனவே தான் விடயத்துடன் தொடர்புடைய வைத்தியர்களை உரிய விளக்கத்தை வழங்குமாறு பணிப்புரை விடுத்திருக்கின்றேன்.

அண்மையில் பேராதனை பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையில் பதிவான மரணத்துக்கு குறிப்பிட்டவொரு மயக்க மருந்து காரணமெனக் குறிப்பிடப்பட்டது. ஆனால் குறித்த மருந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சிறுவர்களுக்கு பயன்படுத்தப்படுவதில்லை என விசேட வைத்தியநிபுணர்கள்தெரிவித்துள்ளனர்.

எனவே, ஒரு சிலர் குறிப்பிடும் காரணிகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இவ்வாறான விடயங்களை அவதானிக்க முடியாது. பல கோணங்களிலும்விசாரணைகளைமுன்னெடுக்க வேண்டியுள்ளது. எனவே பேராதனை வைத்தியசாலையில் பதிவாகியுள்ள மரணம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். - என்றார். (05)

# பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்டு சூடு வைக்கப்பட்டுள்ள வெல்லம்பிட்டி மாணவி

கொழும்பில் உள்ள பிரபல மகளிர் கல்லூரி ஒன்றில் கல்வி கற்கும் பத்து வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம்செய்ததுடன் சிறுமியின் உடலின் சில இடங்களில் சிகரெட்டால் சூடுவைத்த சந்தேக நபர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

இந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள சிறுமியை கொழும்புலேடிரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை அளிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறுமி தொடர்பில் வெல்லம்பிட்டி பொலிஸாரால் பெறப்பட்ட சட்ட வைத்திய அறிக்கைகள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. மருத்துவ அறிக்கைகளை கருத்தில் கொண்டு, சிறுமியை அவரது தாயின் பராமரிப்பில் வைத்தியசாலையில் சேர்க்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட மாணவியின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டதைக் கண்ட வகுப்பு ஆசிரியர் சிறுமியை வெல்லம்பிட்டி பொலிஸாரிடம் அழைத்துச்சென்றார்.

இதன்படி, சிறுமியை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, சிறுமி எட்டு தடவைகள் பாரிய பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர். (05)

# 520 சாரதிகள், 170 நடத்துநர்களை உள்ளீர்க்க இலங்கை போக்குவரத்து சபைக்கு நடவடிக்கை!

இலங்கை போக்குவரத்து சபைக்கு 520 சாரதிகள் மற்றும் 170 நடத்துநர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இ.போ.ச.வின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் வெற்றிடங்கள் காரணமாக பஸ் சேவையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக குறிப்பிட்ட சில வழித்தடங்களில் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அதிகாரி அந்த தெரிவித்தார். (05)

# மதுபான விற்பனைகள் குறைவாம்: வருமானத்தை எட்ட முடியாத நிலை

## கலால் திணைக்களம்

விலை அதிகரிப்பு காரணமாக மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை குறைவடைந்துள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆகவே இவ்வருடம் வரி வருமான இலக்குகளைதம்மால் அடைய முடியவில்லை என்றும் கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (05)

# அடுத்த தடவையும் ரணிலே ஜனாதிபதி

## பிரசன்ன வெளிப்படைக் கருத்து

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராகக் களமிறங்குவாா என அரசில் உள்ள பலரும் எதிர்பார்த்துள்ளனர் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க அடுத்ததடவையும்ஜனாதிபதி பதவிக்கு வந்தால் அவருக்கு ஆதரவளிப்பதில் பிரச்சினை இல்லை. நாட்டில்காணப்பட்ட பொருளாதார நெருக்கடிய காரணமாக நாட்டு மக்களின் நலன் கருதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தீர்மானங்களை எடுத்திருந்தார். அதன் பலனாக நாடு தற்போது சுமுகமான நிலைமைக்கு மாறியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பாகக் காணப்பட்டதை விடவும் அத்தியாவசியப்பொருட்களின் விலைதற்போதுகுறைவடைந்துள்ளது - என்றார்.

# பெண்மீது பலாத்காரம் தங்கநகை கொள்ளை!

## இருவர் கைது

காதல் அழைப்பை நிராகரித்த கோபத்தில் வீடு புகுந்து திருமணமான பெண்ணை வன்புணர்வு செய்து தங்க நகையை கொள்ளையடித்த இருவரை குச்சவெளி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெள்ளிக்கிழமைகாலை இருவரும், வீட்டுக்குள் நுழைந்து கணவரை தாக்கி, பெண்ணை வன்புணர்வு செய்து, பின்னர் அவரிடம் இருந்த தங்க நகையை கொள்ளையடித்து தப்பிச் சென்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# இன்று காரைதீவில் பிரதான நிகழ்வு

(அகீல்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியின்33 ஆவதுதியகிகள்தின அஞ்சலி நிகழ்வின் இறுதியானதும், பிரதானமானதுமான நிகழ்வு இன்று ஞயிற்றுக்கிழமை (25.06.2023) கிழக்கிலங்கையின் முக்கிய தமிழ்ப் பிரதேசமான காரைதீவில் நடைபெறவிருக்கின்றது.

ஜுன் 19 தியாகிகள் தினத்தையொட்டியதாக தியாகிகள் தின நிகழ்வுகள் ஈழமக்கள்புரட்சிகரவிடுதலை முன்னணியினரால்ஏற்பாடு செய்யப்பட்டுவடக்குகிழக்கில் சிறப்பாகவும், உணர்வு பூர்வமாகவும் இடம் பெற்று வருகின்றன.

விடுமலைக்காய் உயிரிழந்த ஈழமக்கள் புரட் சிகர விடுதலை முன்னணியின் போராளிகளையும்பொதுமக்களையும் நினைவேந்தும் குறித்ததியாகிகள்தினஅஞ்சலி நிகழ்வுகள் கடந்தவாரம் முதல் மன்னார், வவுனியா, மட்டக்களப்புமாவட்டங்களில் இடம் பெற்றுவருவதுடன், பல்வேறு பிரதேசங்களிலும் இதனையொட்டியசிரமதான மற்றும் இரத்ததான நிகழ்வுகளும் இடம் பெற்று வருகின்றன.

இதன் படி தியாகிகள் தின இறுதி நிகழ்வு நாளை காரைதீவு, விபலாநந்தா கலாச்சார மண்டபத்தில் பிரதான நிகழ்வாகவும் இடம் பெறவுள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விமுதலை முன்னணியின் அரசியல் உயர்பீட உறுப்பினர் தோழர் சின்னையா (சர்மா) வின் தலைமையிலும், நெறிப்படுத்தலிலும் இடம்பெறவுள்ளஇந்தபிரதான அஞ்சலிநிகழ்வில்ஈழமக்கள் புரட்சி கர விடுதலை முன்னணியின் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன்பிரதமஅதிதியாகக் கலந்து கொள்வார்.

அத்துடன்முன்னணியின் முக்கியஸ்த்தர்கள் உட்பட சகோதர கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும்மேற்படிபிரதான நிகழ்வுக்கான ஏற்பாடுகளை ஈழமக்கள்புரட்சிகரவிடுதலை முன்னணியின் அம்பாறை மாவட்டஅமைப்பாளர்தோழர் எஸ். புண்ணியநாதன்(கரன்) தலைமையிலானகுழுவினர் சிறப்புற செய்துள்ளனர் தவிரவும், ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணியை தலைமையேற்று வழிநடாத்திய செயலாளர் நாயகமும், தென்னிலங்கை மற்றும் சர்வதேச முற்போக்கு இடதுசாரி சக்திகளுடன் உறவுகளைப் பேணிவந்த மக்கள் நேய மனிதாபிமானப் போராளி தோழர் பத்மநாபாவும் 13 தோழர்களும் தமிழகத்தில் ஒரே இடத்தில் ஒரே நாளில் படுகொலைசெய்யப்பட்டஇத்தினத்தையே உயிர்த்தியாகம் செய்த அனைத்துப் போராளிகளையும் பொது மக்களையும் நினைவு கூறும் தியாகிகள் தினமாக சர்வதேசரீதியாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

# கனேடியப் பிரதமரின் உருவ பொம்மை எரிப்பு

## வவுனியாவீல் நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் சம்பவம்



வவுனியாவில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும்கனடாநாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி ஆகியோரின் உருவ பொம்மைகள் எரிக்கப்பட்டு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றுமுன்னெடுக்கப்பட்டது.

சிங்கள தமிழ் மற் றும் முஸ்ஸிம் தேசிய ஒற்றுமைக்கான இயக்கம் என்ற பெயரில் இந்தப் போராட்டம் வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக இன்று மாலைமுன்னெடுக்கப்பட்டது.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோமற்றும்கனடாநாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரிஆகியோரின் உருவ பொம்மைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் 'பயங்கரவாதம் எங்களுக்கு வேண்டாம் ஜஸ்டின் ட்ரூடோ இதை



கேள், உங்களுடைய சுதந்திரத்தினை எங்களுக்கு தா, படுகொலை எங்கே நடந்தது?, ஜஸ்டின் ட்ரூடோஇதைகேள்உனக்கு தேவை பயங்கரவாதம், எங்களுடைய நாட்டில் கை போடாதே ஜஸ்டின் ட்ரூடோ' போன்ற கோசத்தினை எழுப்பியவாறும், 'இலங்கையின் இறையாண்மைக்கு கைகொடுங்கள், கனடா இனவாதத்தை பற்ற வைக் காதீர்கள் அது குற்றம்' போன்ற பல்வேறு பதாதைகளை தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதியில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் கனடா தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி ஆகியோரின் உருவ பொம்மைகள் வீதியில் போடப்பட்டு எரிக்கப்பட்டன.

இப் போராட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் உட்பட தமிழ், முஸ்ஸிம், சிங்கள இனத்தினை சேர்ந்த 30 பேர் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கை இராணுவம் போர்க்குற்றம் இழைத்ததாக கனடாபிரதமர் அண்மையில் தெரிவித்திருந்தார். அதனைக் கண்டித்தேஇந்தப்போராட்டம் நடத்தப்பட்டது. .(100)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
FAAST-F2T
FREEDOM
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 25th June 2023

We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

# Science Quiz For Grade 6 Students



Get ready for this amazing "Science Quiz For Grade 6 Students!" Students or experts who have a vast knowledge of the science subject should definitely try out this quiz. It will gauge and test how much knowledge you have on the subject. So, without further ado, let's get started. All the best to you, and try to score as much as you can while you take this quiz!

1. The darkest part of the shadow is
A. Umbra B. Penumbra
C. Hyperumbra D. None of these

2. What is Mass?
A. An object that shows how much kilogram is in it.
B. The amount of matter in a particle or object.
C. Both A & B
D. None

3. What is the length?
A. The distance between 100 points
B. The distance between 4 points
C. The distance between 1000 points
D. The distance between 2 points

4. What is the function of the blood cell?
A. Carry messages all over the body.
B. To control the size of the openings.
C. To carry oxygen around the body.
D. None of these

5. Push and pull are the forces of to start the things to move.
A. True B. False

6. There is no bird without feathers.
A. True B. False

7. I have dry, scaly skin breathe with lungs and lay shelled eggs. My relatives are dinosaurs, lizards, snakes, etc. Who am I?
A. Amphibians B. Primates
C. Reptiles D. Mammals

8. Mosses are small plants that produce spores and need a damp place to live.
A. True B. False

9. Every mammal can swim underwater.
A. True B. False

10. What is Science?
A. Study of living things B. Study of nature
C. Study of law D. All of the above

***Read the following sentences and try to choose the best definition for the italicized word by searching for context clues in the sentence.***

51. He asked his wife to ______________ the situation after she had offended the neighbor.
a. rectify b. exacerbate
c. ruminate d. extend

**Questions 52 and 53 are based on the following paragraph.**

Rhesus monkeys use facial expressions to communicate with each other and to enforce social order. For example, the "fear grimace," although it looks ferocious, is actually given by a __________ monkey who is intimidated by a __________ member of the group.

52. What is the meaning of the underlined word grimace as it is used in the passage?
a. wrinkle b. contortion
c. shriek d. simper

53. Which pair of words, if inserted into the blanks in sequence, makes the most sense in the context of the passage?
a. calm . . . aggressive b. dominant . . . subordinate
c. confident . . . fearless d. subordinate . . . dominant

**Questions 54 and 55 are based on the following paragraph.**

In prolonged space flight, besides the obvious hazards of meteors, rocky debris, and radiation, astronauts will have to deal with muscle atrophy brought on by weightlessness; therefore, when they return to Earth, they face a protracted period of weight training to rebuild their strength.

54. What is the most likely meaning of the underlined word debris as it is used in this passage?
a. fragments b. decay
c. bacteria d. alien life

55. The underlined word atrophy, as used in the paragraph, most nearly means
a. pain. b. wasting.
c. weakening. d. cramping.

**Question 56 is based on the following paragraph.**

Most of the women in the orchestra wore conventional black skirts and white shirts during concerts and had their hair neatly pulled back. Robin, with her brightly colored clothing and unusual hairstyles, was considered quite eccentric.

*(see page II)*

"konwledge isn't free. You have to pay attention"

56. What is the meaning of the underlined word eccentric as it is used in the sentence?
a. unconventional
b. joyful
c. unreliable
d. proud

Questions 57, 58, and 59 are based on the following paragraph.
Donna's memo caused much contention around the office last week. She may have meant well, but her usually caustic tone offended almost everybody. She has become a consistent nuisance at work, and probably should be fired.

57. Based on the tone of the passage, which of the following words best describes the author's attitude toward Donna?
a. exasperated
b. admiring
c. patronizing
d. isolated

58. The underlined word caustic, as used in this passage, most nearly means
a. cause and effect.
b. reoccurring.
c. biting.
d. unclear.

59. What is the meaning of the underlined word contention as it is used in this passage?
a. theorizing
b. discord
c. gossip
d. calm

# Answers

51. a. To rectify something means to fix it, to make things right. The woman was asked to make things right with her neighbor, to correct or rectify the situation.
52. b. A grimace is a contortion of the face. Neither a wrinkle nor a simper match the descriptive word ferocious. A shriek would be described in terms of sound, rather than looks.
53. d. Choices a and c do not include the sense of hierarchy conveyed in the phrase to enforce social order. Choice b does convey a sense of hierarchy, but in the wrong order.
54. a. This is the choice that makes the most sense when imagining objects floating in space.
55. b. Although a muscle that atrophies may be weakened (choice c), the primary meaning of the phrase to atrophy is to waste away.
56. a. The passage implies that the other women in the orchestra were conventional because of the way they dressed and wore their hair. Because Robin does things differently, she would be considered unconventional. The other choices, although she may be joyful, unreliable, and proud, have nothing to do with the context of this sentence, which is directly addressing her appearance as it compares to the other women in the orchestra.
57. a. The author puts emphasis on Donna's habit of upsetting people at work. She has "offended almost everybody," and is a "consistent nuisance." The author concludes that Donna should be fired, indicating that he's had enough of her trouble-making. The word exasperated means that the author has reached the limit of his patience.
58. c. Something that is caustic is acidic—it burns or bites.
59. b. Contention in this sense means discord or anger.

# Questions and Answers



1. Frequently occurring------- disaster in all parts of the world is floods
A. Man made
B. Natural
C. None of these
D. Option 4

2. Police control room no------
A. 110
B. 100
C. 200
D. Option 4

3. Fire brigade-----
A. 101
B. 100
C. 110
D. Option 4

4. Ambulance----
A. 101
B. 110
C. 102
D. Option 4

5. National level single emergency number for disaster relief
A. 108/112
B. 108/113
C. 109/112
D. Option 4

6. Two type of disaster man -made and ------disaster
A. Natural
B. Environment
C. None of these
D. Option 4

7. Floods due to heavy------
A. Wind
B. Rain
C. Earthquake
D. Option 4

8. There are nearly ------species of snake
A. 4000
B. 1000
C. 2000
D. Option 4

9. In a dog bite there is a risk of infection through the--------
A. Blood
B. Bones
C. Throat
D. Option 4
E. Option 5

10. Sarpa-mitra are ------friend
A. Tiger
B. Dog
C. Snake
D. Option 4

11. Floods due to heavy rainfall
A. True
B. False

12. Disaster are only one main kind man made disaster
A. True
B. False

13. Frequently occurring natural disaster in all parts of the world is floods
A. True
B. False

14. All snake bites are not fatal
A. True
B. False

15. In a dog bites there is a risk of infection through the bones
A. True
B. False

16. A sudden calamity is known as disaster
A. True
B. False

17. Heats stroke is caused by working long hours in extreme cold
A. True
B. False

# Marlon Brando

## American actor



Awards And Honors: Academy Award (1973) Academy Award (1955) Academy Award (1973): Actor in a Leading Role Academy Award (1955): Actor in a Leading Role Emmy Award (1979): Outstanding Supporting Actor in a Limited Series or a Special Golden Globe Award (1974): World Film Favorites Golden Globe Award (1973): World Film Favorites Golden Globe Award (1973): Best Actor in a Motion Picture - Drama Golden Globe Award (1956): World Film Favorites Golden Globe Award (1955): Best Actor in a Motion Picture - Drama

Marlon Brando, in full Marlon Brando, Jr., (born April 3, 1924, Omaha, Nebraska, U.S.—died July 1, 2004, Los Angeles, California), American motion picture and stage actor known for his visceral, brooding characterizations. Brando was the most celebrated of the method actors, and his slurred, mumbling delivery marked his rejection of classical dramatic training. His true and passionate performances proved him one of the greatest actors of his generation.

Brando, the son of a salesman and an actress, grew up in Nebraska, California, and Illinois. After he was expelled from the Shattuck Military Academy in Faribault, Minnesota, for insubordination, he moved in 1943 to New York City, where he studied acting under Stella Adler at the Dramatic Workshop. He made his stage debut in 1944 as Jesus Christ in the Workshop production of Gerhart Hauptmann's Hannele, and in that same year he first appeared on Broadway in I Remember Mama. After that play's successful two-year run, Brando appeared in Maxwell Anderson's Truckline Cafe, George Bernard Shaw's Candida, and Ben Hecht's A Flag Is Born (all 1946) and was voted "Broadway's most promising actor" by New York critics. In 1947 he attained stage stardom with his astonishingly brutal, emotionally charged performance as Stanley Kowalski in the Elia Kazan-directed production of Tennessee Williams's A Streetcar Named Desire (1947).

Brando made his motion picture debut in The Men (1950), a powerfully realistic study of disabled World War II veterans. In preparation for his role, he spent a month in a hospital paraplegic ward. He received his first Academy Award nomination for his performance in A Streetcar Named Desire (1951), Kazan's highly praised screen adaptation of the play, and went on to receive nominations for his performances in Viva Zapata! (1952) and Julius Caesar (1953). Also from this period is The Wild One (1953), a low-budget drama in which he played the leader of an outlaw motorcycle gang. The film became one of Brando's most famous and served to enhance his iconoclastic image. It also contains one of Brando's most oft-quoted lines; when asked what it is he is rebelling against, his character responds, "Whaddya got?"

Brando's sensitive portrayal of a union muscleman who testifies against his gangster boss in Kazan's On the Waterfront (1954) won for him the best-actor Oscar and firmly established him as one of Hollywood's most-admired actors. In 1954 he also portrayed Napoleon Bonaparte in Désirée, and in 1955 he sang and danced in the musical comedy Guys and Dolls. He had continued success with such films as The Teahouse of the August Moon (1956), Sayonara (1957; Oscar nomination), and The Young Lions (1958). In the 1960s, however, his career went into a long period of decline. He starred in the only film he ever directed, the western One-Eyed Jacks (1961); now a cult favourite, it was notorious at the time for Brando's excessive expenditure of time and money. A lavish remake of Mutiny on the Bounty (1962) was another expensive flop, and Brando's recalcitrant behaviour during its filming added to his growing reputation as a troublesome and demanding actor. Most of his remaining films of the '60s, including Charlie Chaplin's final film, A Countess from Hong Kong (1967), are forgettable.

Francis Ford Coppola's The Godfather (1972) rejuvenated Brando's career. As organized-crime boss Don Vito Corleone, Brando created one of the most memorable—and most imitated—film characters of all time. His performance earned him another best-actor Oscar, but he refused the award in protest against the stereotypical portrayals of Native Americans throughout motion picture history. Brando was further vindicated as an actor by his leading role in Bernardo Bertolucci's sexually explicit L'ultimo tango a Parigi (1972; Last Tango in Paris). He



appeared in only five more films during the remainder of the decade—including noted supporting roles in Superman (1978) and Apocalypse Now (1979)—after which he retreated to his private Polynesian atoll.

Brando reemerged nine years later to play a crusading anti-apartheid attorney in A Dry White Season (1989) and received his eighth Oscar nomination—his first for best supporting actor—for the role. He appeared in six films during the 1990s, highlighted by a send-up of his Godfather character in The Freshman (1990) and by his sensitive portrayal of an aging psychiatrist in Don Juan DeMarco (1995). He also received good notices for his role as a corrupt prison warden in the comedy Free Money (1998), though the film was not widely distributed. In 2001 he appeared in the heist thriller The Score (2001). Brando's extensive collection of personal audio diaries—recorded over many years—were the basis of the documentary Listen to Me Marlon (2015).

Brando was something of a paradox: he is regarded as the most influential actor of his generation, yet his open disdain for the acting profession—as detailed in his autobiography, Songs My Mother Taught Me (1994)—often manifested itself in the form of questionable choices and uninspired performances. Nevertheless, he remains a riveting screen presence with a vast emotional range and an endless array of compulsively watchable idiosyncrasies.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.06.2023இல் வெளியிடப்பெற்றது.